# அரங்கம்
செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, ஆகஸ்ட் 30 இதழ் - 77









**77 வாரம் கடந்த அரங்கம்!**
**கிழக்கு மக்களுக்கான இலவசப் பத்திரிகை!**

பக்கம் - 03



**கிழக்கின் அதிகாரத்தை தக்கவைத்தலின் தாரக மந்திரம், அதனை விழிப்பற்ற சமூகமாகப் பேணல் ....**

பக்கம் - 04



**'பிரித்தானியாவில் தமிழ் மொழி வளர்ச்சியின் ஆரம்ப சரித்திரம்'**

பக்கம் -07



**கறுத்தப் பையும் பெருத்த நினைவுகளும்..**

பக்கம் -12



## வடக்கு, கிழக்கு மக்களின் ஆதரவைப் பெற கோட்டாபய முயற்சி - சிறப்புக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது

(நி. அமிர்தசன்)

ஸ்ரீலங்கா பொதுஜனப் பெருமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆதரவாக வடக்குக் கிழக்குத் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பொறும் நோக்கில், சிறப்புக்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதுடன் கடந்தகால கசப்பான செயற்பாடுகளுக்கு மாற்றீடான வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தல் போன்ற விடயங்களில் இந்தக் குழு ஈடுபட்டுள்ளதாக கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

முன்னாள் அமைச்சர் எஸ்;.பி.திஸாநாயக்கா, இந்தச் சிறப்புக்குழுவை செயற்படுத்துவதாகவும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மதத் தலைவர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து உரையாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

தொடர்ச்சி பக்கம்...15

## பயங்கரவாதத்துக்கு தீர்வு காண அனைத்து நாடுகளும் ஒன்றிணைய வேண்டும் - பாதுகாப்பு செயலாளர்

பயங்கரவாத பிரச்சினைக்கு தீர்வு காண அனைத்து நாடுகளும் ஒன்றிணைய வேண்டுமென்று பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் சாந்த கோட்டேகொட அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று ஆரம்பமான கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




பயங்கரவாதத்திற்கு எதிராக தனித்தனியாக போராடுவதை விட ஒன்றிணைந்து மூலோபாயத்தை பின்பற்றுவதன் மூலம் வினைத்திறனான பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## டெங்கினால் இதுவரை 62 பேர் உயிரிழப்பு

இலங்கையின் பல இடங்களில் கடுமையான மழை பெய்ததை அடுத்து அந்தப் பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பரவுவதை தடுப்பதற்கான முன்கூட்டிய நடவடிக்கைகளை சுகாதார அதிகாரிகள் முடுக்கிவிட்டுள்ளனர்.

இதுவரை 42,051 டெங்கு தாக்குதல்கள் இலங்கையில் பதிவாகியுள்ளன. அவை மேல்மாகாணத்தில் அதிகமாகும். கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 8,808 டெங்கு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் ஆகஸ்ட் 23ஆம் திகதிவரை 62 டெங்கு நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர். 2018 இல் ஒட்டுமொத்தமாக 58 நோயாளர்களே பலியாகினர் என்பதுடன் ஒப்பிடும்போது இது அதிகமாகும்.



நுளம்பு பரவும் வகைகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு

தொடர்ச்சி பக்கம்..15


அரங்கம்
செய்திகள்

அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய சிறப்புத் தள்ளுபடி!

**வீடு விற்பனைக்கு**

மட்டக்களப்பு கருவப்பங்கேணி ஜெயந்தி வீதியில், 15 பேச்சர்ஸ் உறுதிக்காணியில் அமைந்துள்ள தரமான வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

077 0558611, 077 4680354

# காரைதீவில் அக்.18 19 20 களில் கண்ணகி இலக்கிய விழா !


காரைதீவு நிருபர் சகா

கண்ணகி கலை இலக்கியக்கூடலின் 9ஆவது வருட கண்ணகி இலக்கியவிழாவை இம்முறை காரைதீவில் எதிர்வரும் அக்டோபர் மாதம் 18ஆம் 19ஆம் 20ஆம் திகதிகளில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கான பூர்வாங்க ஏற்பாட்டுக்குழுக்கூட்டம் காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் காரைதீவு இணைப்பாளர் வெ.ஜெயநாதன் தலைமையில் நடைபெற்றது.
கலை இலக்கிய கூடல் தலைவர் செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன், செயலாளர் அன்பழகன் குருஸ் ஆகியோர்மட்டக்களப்பிலிருந்து வந்து ஆரம்பக்கூட்டத்தை நெறிப்படுத்தினர்.

காரைதீவு கண்ணகி விழாக் குழுவில் தலைவராக வெ.ஜெயநாதன், துணைத் தலைவர்களாக வி.ரி.சகாதேவராஜா, சி.நந்தேஸ்வரன், செயலாளராக கு.ஜெயராஜி, உபசெயலாளராக செ.சிவராஜா, பொருளாளராக வி.குலேந்திரன் ஆகியோருடன் செயற்குழுஉறுப்பினர்களும் தெரிவாகியுள்ளனர்.

விழாவில் முதல் நிகழ்வான பண்பாட்டுப்பவனி நடாத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. பாண்டிருப்பு, கல்முனை வீரமுனை அட்டப்பள்ளம் ஆகிய பிரதேசங்களிலிருந்து தமிழ் இந்துப்பண்பாடுகளுடன்கூடிய பண்பாட்டுப்பவனிகளை நடாத்துவதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றது.
இணைப்பாளர்களாக தொழிலதிபர் க.தட்சணாமூர்த்தி, ரவிஜி குருக்கள், அதிபர் ச. ரகுநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.
ஆய்வரங்கம் பேராசிரியர் செ.மௌனகுரு தலைமையில் நடைபெறும். இணைப்பாளராக எழுத்தாளர் வி.ரி. சகாதேவராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.
மேலும் நூலங்காடி அரும்பொருட்கண்காட்சி, இயலரங்கம், ஆய்வரங்கம், கலைநிகழ்ச்சிகள் உள்ளிட்ட பலவித நிகழ்ச்சிகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.
மாணவர் மத்தியில் கண்ணகிவிழா தொடர்பான போட்டிகளை நடாத்தவும் திட்டமிடப்பட்டது.
ஊர்ப்பிரமுகர்களின் கருத்துப்பெறப்பட்டு, சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.
அடுத்தடுத்த கூட்டங்கள் எதிர்வரும் தினங்களில் நடாத்தப்படும்.
புலம்பெயர்நாடுகளிலுள்ள காரைதீவு மக்களின் உதவியும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான தொடர்புகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

# அங்கிலிக்கன் திருச்சபையின் தலைவர் இலங்கை விஜயம்


கன்டபெரியின் பேராயர் அதிமேதகு ஜஸ்ரின் வெல்பெ ஆண்டகை இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

பேராயரின் விஜயம் ஒருமைப்பாட்டிற்கான விஜயமாகவே அமையும் என இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் டிலோராஜ் ஆர் கனகசபை ஆண்டகை தெரிவித்துள்ளார். கடந்த ஏப்பிரல் 21ம் திகதி இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் இலங்கை வரும் இவர் ஒருமைப்பாட்டை பலப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இன்று இலங்கை வரும் கன்டபெரியின் பேராயர் அதிமேதகு ஜஸ்ரின் வெல்பெ ஆண்டகை திர்வஷரம் சனிக்கிழமை வரையில் இலங்கையில் தங்கியிருப்பார். இன்று மாலை சர்வ மதத் தலைவர்களை சந்தித்து பேராயர் கலந்துரையாடலில் ஈடுபடுவார். தமது விஜயத்தின் ஞாபகார்த்தமாக மரக்கன்றையும் பேராயர் நாட்டி வைப்பார். கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்க்கம் றஞ்சித் ஆண்டகையுடன் கட்டுவாபிட்டிய தேவாலயத்திற்குச் செல்லும் கன்டபெரியின் பேராயர் ஜஸ்ரின் வெல்பெ குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உறவினர்களையும், காயப்பட்டவர்களையும் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவிப்பார். கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்யும் பேராயர் மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகா நாயக்கர்களையும் சந்தித்து கலந்துரையாடுவார். பேராயர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரையும் சந்திக்கவுள்ளார்.

# நிருவாக உத்தியோகத்தர்களாக காரைதீவில் மூவர் தெரிவு.







காரைதீவு பிரதேச செயலகத்தின் பதில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றிய து.கமலநாதன், பதவியணி உதவியாளராக கடமையாற்றிய திருமதி. ஜெயசுந்தரி கணேஷராஜா, முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றிய கி.யோகேஸ்வரன் ஆகியோர் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி சிறப்பு தரத்திற்கு (சுப்றா) சித்தியடைந்து நிர்வாக உத்தியோகத்தர்களாக (A.O) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் இருந்து பதவி ஏற்றுக் கொண்டார்கள்.
படங்கள் (காரைதீவு நிருபர் சகா)

# உள்மனயாத்திரை தந்த உமாவரதராஜனின் மற்றுமொரு படைப்பு 'மோகத்திரை'



எழுபதுக்களில் நவீன சிறுகதைப்போக்கில் மாற்றத்தை நிகழப்பண்ணிய உமா வரதராஜன், ஏலவே உள்மனயாத்திரை எனும் சிறுகதைத்தொகுப்பையும், பின் மூன்றாவது சிலுவை எனும் நாவலையும் இன்றும் பேசப்படும் வியூகம் சஞ்சிகையையும் ஈழத்து இலக்கியப்பரப்பிற்கு தந்து, தமிழ் படைப்புலகத்தையே தன்பால் கவனம் கொள்ளவைத்த படைப்பாளி.

சினிமா பற்றிய தன் அனுபவ வெளிப்பாடுகளை கட்டுரைகளாக்கி மோகத்திரை எனும் பெயரில் சனிக்கிழமை 31/08/2019 அன்று கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை மண்டபத்தில் வெளியிடுகிறார். பேராசிரியர் மௌனகுருவின் வெளியீட்டுரையுடனும், பா.புவிராஜாவின் வரவேற்புரையுடனும் சிவ.வரதராஜனின் அறிமுக உரையுடனும் நிகழ்வுகள் தொடர நூல் பற்றிய அலசலை மொழிகள் மற்றும் தொடர்பாடல் துறை விரிவுரையாளர்

தொடர்ச்சி பக்கம்...15

# பதவி உயர்வு

மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் சிறுவர் மகளிர் அபிவிருத்திப் பிரிவில் பதவி நிலை உதவியாளராக கடமையாற்றி வந்த திருமதி.ஜாஹிதா ஜலால்தீன் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி சிறப்பு தரத்திற்கு சித்தியடைந்து உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் காத்தான்குடி பிரதேச செயலகத்திற்கு நிர்வாக உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அனைத்து முகாமைத்துவ உதவியாளர் தொழிற்சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மாவட்ட செயலாளராக தனது சேவையினை தொடரும் இவர் 20 வருட அரச சேவையினை பூர்த்தி செய்துள்ளார்.

கல்வி அமைச்சு, கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாடி, கோறளைப்பற்று மத்தி, காத்தான்குடி, மண்முனை வடக்கு மட்டக்களப்பு, மண்முனைப்பற்று ஆரையம்பதி ஆகிய பிரதேச செயலகங்களில் சிறந்த முறையில் கடமையாற்றியுள்ளதுடன், எழுத்தாற்றல் துறையில் ஆர்வமுள்ளவராக திகழும் இவர் சமூக சேவையில் ஆர்வமுள்ளவராகவும், சமாதான நீதவானாகவும், மத்தியஸ்தர் சபையில் கடந்த 10 வருடங்களாக கடமையாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# திண்டுக்கல் பூட்டுக்கும் கண்டாங்கி சேலைக்கும் புவிசார் குறியீடு



நீண்ட கால கோரிக்கைக்குப் பிறகு திண்டுக்கல் பூட்டு மற்றும் கண்டாங்கி சேலை ஆகியவற்றுக்கு இந்திய அரசு புவிசார் குறியீடு வழங்கியுள்ளது என தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.
திண்டுக்கல் பூட்டு மற்றும் கண்டாங்கி சேலைகள் ஆகியவை சுமார் 150 ஆண்டு கால பழமை உடையவை.

ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், அவை உற்பத்தியாகும் ஊர்களால் சிறப்பு பெற்றிருந்தால் புவிசார் குறியீடு வழங்கப்படும். இது அப்பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கும்.

# பாண்டிருப்பு வடபத்திரகாளியம்பாளின் சக்திப்பெருவிழா!


காரைதீவு நிருபர் சகா

பாண்டிருப்பு வடபத்திரகாளியம்பாள் ஆலய வருடாந்த சக்திப் பெருவிழா எதிர்வரும் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

இப்பெருவிழா ஏழுநாள் திருவிழாக்கள் இடம்பெற்று 11ஆம் திகதி புதன்கிழமை காலை 7மணிக்கு தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவடையவுள்ளது. சக்திப் பெருவிழா ஆலயபிரதமகுரு விஸ்வப்பிரம்மஸ்ரீ செ.செல்வக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செப்.2ஆம் திகதி திங்கட்கிழமை தேரோட்டமும் மறுநாள் 3ஆம் ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

# 77 வாரம் கடந்த அரங்கம்!

## கிழக்கு மக்களுக்கான இலவசப் பத்திரிகை!

கிழக்கு மக்களுக்கு ஒரு தனித்துவமான ஊடகம் அவசியம் என்பதை அடிநாதமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது அரங்கம் செய்திகள் பத்திரிகை இந்த வாரத்துடன் தனது 77 வது இதழை எமது மக்களுக்கு இலவசமாக தந்திருக்கிறது. அதாவது ஒன்றரை வருடங்களாக கிழக்கு மக்களுக்காக இலவசமாக ஒரு பத்திரிகையை நாம் வழங்கி வந்துள்ளோம். இது தொடரும்.

கிழக்கின் அரசியல், சமூக, கலை, கலாசார விடயங்களை வலியுறுத்தி பேசுவதற்காக இந்த முயற்சியை விடா முயற்சியாக அரங்கம் நிறுவனம் செய்து வந்திருக்கிறது. இலங்கையில் இவ்வளவு காலம் இலவசமாக தனது வாசகர்களுக்கு பத்திரிகையை ஒரு நிறுவனம் விநியோகித்து வந்திருப்பதே ஒரு சாதனைதான்.

இந்த இலவச இதழின் மூலம் எமது மண்ணின் எழுத்தாளர்கள், செய்தியாளர்களுக்கு நாம் களமமைத்து வந்திருக்கின்றோம்.

பொருளாதார ரீதியாகவும் வேறு பலவகைகளிலும் பலவிதமான சவால்களை இதற்காக நாம் இதுவரை சந்தித்து வந்திருக்கின்றோம். அந்தச் சவால்களும் வேதனைகளும் தொடரவும் செய்கின்றன.

காலாவதியாகிப்போன ஒரே திசையில் எல்லோரும் ஓடுவதுபோல நாமும் ஓடாமல், நின்று நிதானித்து புதிய, வாய்ப்பான திசைகளையும் எமது மக்களுக்கு காண்பிக்க வேண்டும் என்பதற்காக நாம் முன்வைத்த பல கருத்துக்கள் கசப்பாக இருந்தாலும் அதுவே எமது மக்களுக்கு மருந்து என்று நாம் உணருகின்றோம். அதனையே வலியுறுத்தியும் வந்துள்ளோம். இதற்காக பல திட்டுக்களையும் வசைகளையும் நாம் கேட்டிருக்கின்றோம். ஆனால், மக்களுக்கு வழிகாட்டுவதாயின் அவர்களுக்கு கசப்பாக இருந்தாலும் உரிய, உயரிய திசையைக் காண்பிப்பதே எமது பணி என்பதை விடாப்பிடியாக நாம் கடைப்பிடித்து வருகின்றோம். அதற்காக எப்பழி வரினும் அதனை மகிழ்வுடன் ஏற்கவும் தயங்கமாட்டோம்.

கடந்துவந்த, தோற்றுப்போன வழியைப் பின்பற்றாமல், புதிய வழியைக் காண்பிப்பதே எமது பணி.

அரங்கம் செய்திகள் நிறுவனத்துக்கான இதுவரைகால செலவீனங்களில் 75 வீதத்துக்கும் அதிகமானவை எனது மற்றும் எனது குடும்பத்தினரின் நேரடி நிதி.

இது தவிர, எமது இந்த இலக்கை உணர்ந்த பல உறவுகள்(தனி நபர் மற்றும் நிறுவனங்கள்) எமக்கு பக்க அனுசரணை என்ற வகையிலும் விளம்பரமாகவும் நிதி உதவிகளை வழங்கி வந்துள்ளனர். இவை வெளிப்படையானவை. அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி.

கிழக்கின் மீது அக்கறை கொண்ட உள்ளூர் மற்றும் வெளியூர் எழுத்தாளர்கள், செய்தியாளர்கள் பலர் எமக்கு இலவசமாகவே ஆக்கங்களைத் தந்து வருகின்றனர். இவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இலவசமாக பத்திரிகையை விநியோகிக்கும் அதேவேளை, இதுவரை மையநீரோட்டப் பத்திரிகைகள் விநியோகிக்கப்படாத கிழக்கின் பல பிந்தங்கிய பகுதிகளுக்கும் நாம் எமது பத்திரிகையை இலவசமாகவே விநியோகித்து வருகின்றோம்.

**சீவகன் பூபாலரட்ணம்**

கிழக்கில் விவகாரங்களை ஆழமாக அலசுவதற்காக ஒரு களத்தை உருவாக்கல், கிழக்கு மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்தல், கிழக்கு மக்களுக்கு விழிப்பூட்டுதல், கிழக்கு மக்கள் தம்மை, தமது மண்ணை, அதன் பாரம்பரியத்தை புரிந்துகொள்ளச் செய்தல் ஆகியவை எமது இலக்கு. இவற்றுக்கு சமாந்தரமாக இளம் ஊடகவியலாளர்களை நாம் பயிற்றுவிக்கவும் செய்கிறோம்.

இவை தவிர, அரங்கம் நிறுவனம்




இலங்கைத் தமிழ் மக்கள் குறித்து பல ஆவணப்படங்களையும் தயாரித்திருக்கிறது. எமது எதிர்கால சந்ததியின் தேவைக்காக இவை அனைத்தும் டிஜிட்டல் வடிவில் ஆவணமாக்கப்பட்டுள்ளன.

எமது இந்தப்பணி தொடர நாம் எம்மால் ஆன அனைத்து முயற்சிகளையும் செய்து வருகின்றோம். அதேவேளை கிழக்கில் ஒரு சிறந்த ஊடக கலாசாரத்தை பேணவும் முயற்சிக்கின்றோம். போற்றலும் தூற்றலும் எம்மை ஊக்குவிக்கும்.

# கட்டற்ற போராட்டமும் அதன் பின் விளைவும்



எங்கே தொடங்குவது என்று தெரியவில்லை, அந்தளவிற்கு ஏப்ரல் 21 க்கு பின் கிழக்கின் நிலைமை குறிப்பாக மட்டக்களப்பின் நிலைமை படுமோசமான நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு தினமொரு போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு நெருக்கடியும் புதுப்புது வடிவில் வந்துகொண்டிருக்கிறது. நிர்வாக கட்டமைப்பு ஒழுங்கற்றுச் செல்கிறது. மக்கள் பிரதிநிதிகள் ஒரு பகுதியினர் கைகட்டி தமக்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது போல பேசாமடந்தைகளாக இருக்க, இன்னொரு பகுதியினர் எடுத்ததுக்கெல்லாம் போராட்டம் என்று குதிக்கின்றனர். மக்களைப் பற்றியோ மாவட்டத்தைப் பற்றியோ அக்கறையான சிந்தனை யாருக்கும் இல்லையோ என எண்ணத் தோன்றுகிறது. பிரச்சனைகள் முற்றிய பின் பொறுப்புக் கூறலிலிருந்து தப்பிக்க ஒருவர் மேல் ஒருவர் குற்றச்சாட்டுக்களை வைக்கின்றனர். அரசியல் வாதிகளும் சரி, அரச அதிகாரிகளும் சரி இதனைத்தான் செய்கின்றனர்.

அண்மைக்காலமாக நில ஆக்கிரமிப்பு மக்களை நோக்கி புதிய புதிய வடிவில் வந்துகொண்டிருக்கிறது. தேவாலயங்களை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டாலும் சைவ ஆலயங்களை நோக்கி சிறு சிறு தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்தேர்ச்சியாக நடந்தவண்ணமே உள்ளன.
ஆரையம்பதி நரசிம்மர் ஆலயத்தை உடைத்த சிலர், வேறொரு வழக்கில் கைது செய்யப்பட்டு தற்போது மட்டு.சிறையில் உள்ளனர். அந்த வழக்கைக்கூட மீண்டும் முடிக்கிவிட யாரும் இல்லை. குப்பைப் பிரச்சனை, நீர் பிரச்சனை என்பன தற்காலிக தீர்வைக் கண்டாலும் அதற்கும் நிரந்தர தீர்வில்லை. செயற்திறனற்ற அரச உத்தியோகத்தர்களும் தீர்க்க தரிசனமற்ற அரசியல்வாதிகளும் நிறைந்ததாக மட்டக்களப்பு மாறிக்கொண்டிருக்கிறது. தொடர்ந்தும் அரசியற் தலைமைத்துவம் வெற்றிடமாகவே உள்ளது.

மக்களின் மனநிலை மாறிக்கொண்டிருக்கிறது. வேதனைப்பட்டவர்களாக முணுமுணுத்துக் கொண்டும் திட்டிக்கொண்டும் திரிகின்றனர். மக்கள் கூடும் பொது நிகழ்வுகளில் மங்கல காரியமாக இருந்தாலும் சரி, அமங்கல காரியமாக இருந்தாலும் சரி பேசு பொருளாக மட்டக்களப்பின் இருப்பும், அரசியல் சமூக நிலையே இருக்கின்றது! ஒரு துக்க வீட்டில் பலர் கூடிக் கதைக்கின்ற போது ஒரு அரச உத்தியோகத்தர் கூறினார் "நாங்கள் எல்லாம் பௌத்தர்களாக மாறினால்தான் மட்டக்களப்பின் இருப்பை தக்கவைத்துக் கொள்ளலாம்" என்றார். இது எவ்வளவு பாரதூரமான சிந்தனை. அந்தளவிற்கு சிந்திக்க மக்களை மட்டக்களப்பின் தற்போதைய நிலை தள்ளியுள்ளது.

இவ்வாறான சிந்தனையின் வெளிப்பாடாக, ஏப்ரல் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட சஹ்ரானின் சகாவின் தலை உட்பட சில உடலங்கள் மட்டக்களப்பில் கள்ளியங்காடு இந்து மயானத்தில் புதைக்கப்பட்டமையின் எதிர்ப்புணர்வு இளைஞர்கள் சிலர் தன்னிச்சையாக ஒருங்கு சேர, முகநூல்கள் வாயிலாக செய்திகள் பரவி ஒரு பெரும் போராட்டமே வெடித்தது. கல்லடிப் பாலப் போராட்டம்



என்று அழைக்கப்படும் அளவிற்கு போராட்டம் தீவிரம் கொண்டது.

கள்ளியங்காடு இந்து மயானத்தில் ஆரம்பத்தில் தொடங்கப்பட்டபோது ஒரு சிலரே நின்றனர். அவ்வேளை உரியவர்கள்யாராவது சென்று போராட்டக்காரர்களுடன் பேசியிருந்தால்,சில விளக்கங்களைக் கூறியிருந்தால் போராட்டம் அவ்விடத்திலேயே முடிவுற்றிருக்கும். யாரும் செல்லாததன் காரணமாக போராட்டக்காரர்களின் எண்ணிக்கை அதிகரிக்க, ஊர்வலமாகச் செல்ல தொடங்கி விட்டனர். மக்கள் கூடக் கூட உற்சாகம் கரைபுரண்டோடி, திருமலை வீதி வழியாக கல்லடிப்பாலம் வரை சென்று, உரியவர்கள் வந்து பதில் கூறும் வரை வீதி மறியலில் ஈடுபடத் தொடங்கி விட்டனர். போராட்டம் வலுப்பெறுவதை

**வ.ச.முரளீசேகரன்**

அறிந்த சில அரசியல்வாதிகள் மக்கள் போராட்டத்துடன் தம்மையும் இணைக்க வந்து விட்டனர். சில மக்கள் பிரதிநிதிகளை அந்தப்பக்கமே காணக்கிடைக்கவில்லை.

பொலிசார் குவிக்கப்பட்டு இராணுவமும் வரவழைக்கப்பட்டு தாக்குதலுக்கு தயாராகி விட்டனர். அதற்கான அனுமதி இரகசியமாக வழங்கப்பட்டு விட்டது. போராட்டமும் ஏற்பாட்டாளர்களின் கையை மீறி சென்று விட்டது. பொலிஸ் அடக்கு முறைக்கு தயாராகி விட்டது. உரியவர்கள் யாரும் பொறுப்புக் கூற வரவில்லை. அரச அதிபர்தான் எல்லாவற்றிக்கும் காரணம் என்ற கதை பரவ, அரச அதிபர் மாநகர ஆணையாளருக்கு வழங்கிய கடிதத்தின் பிரதியும் அவ்விடத்தில் பரவ, அரச

தொடர்ச்சி பக்கம்..15

# கிழக்கின் அதிகாரத்தை தக்கவைத்தலின் தாரக மந்திரம், அதனை விழிப்பற்ற சமூகமாகப் பேணல் என்பதாகும்

## கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிட்ட தமிழர் கட்சி

எழுவான் வேலன்

ஒரு சமூகம் அரசியலில் விழிப்பு நிலையடைதல் அந்தச் சமூகத்தின் பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும். இதனால்தான் மக்களுக்காக உழைக்கும் அரசியல் கட்சிகள் மக்களை அரசியலில் விழிப்பூட்டுவதற்காக பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

ஆனால் கிழக்குத் தமிழர்கள் விழிப்பு நிலை அடைந்துவிடக் கூடாது என்பதற்கான செயற்திட்டங்களை அல்லது உரைகளை ஆற்றுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கொண்டு வருவதாக சந்தேகிக்க வேண்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது கட்சி தொடர்பாக மக்களுக்கிருக்கும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் கூட்டமொன்றை களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடாத்தியிருந்தார்கள். இக் கூட்டத்தை கூர்ந்து அவதானிக்கின்றபோது மக்களுக்கிருக்கும் சந்தேகத்தை அல்ல தங்களுக்கு மக்கள் மீதிருக்கும் சந்தேகத்தை நிவர்த்தி செய்து மக்கள் எப்போதும் தமது கொள்கையான தமிழ்த் தேசியத்தையும் தமது கட்சியையும் தற்போதும் கண்ணைமூடிக்கொண்டு ஆதரரிக்கிறார்களா இல்லையா என்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் கூட்டமாகவே நடாத்தியிருந்ததாக அறியமுடிகின்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வெளிப்படுத்திய விசுவாசத்தினையும் கூட்டமைப்பில் வேட்பாளராகப் போட்டியிட்டால்தான் வெல்லமுடியும் என்கின்ற உணர்வோடு அந்த வேட்பாளர் பட்டியலில் தங்களது பெயரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற அக்கறையுடன் இருந்தவர்களின் மனநிலையினையும் கூட்டமைப்பினர் விளங்கிக் கொண்டனர்.

இது கூட்டமைப்பினருக்கு உருவாகியிருந்த சந்தேகத்தினை தீர்ப்பதற்கு போதுமானதாக இருந்திருக்கின்றது. இதனால் களுவாஞ்சிகுடி கூட்டத்திற்குப் பின்பு அவர்களின் உரைகளின் கருத்தும் தொனியும் மக்களை நாம் தொடர்ந்து ஏமாற்றலாம் அல்லது நாம் கூறுவதை இந்த மக்கள் எப்போதும் கேட்டு நடப்பார்கள் என்ற அடிப்படையில் அமைந்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

உதாரணத்திற்கு, கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான திரு. கி.துரைராசசிங்கம் அவர்கள் பின்வருமாறு உரையாற்றியிருந்தார். 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி நடத்திய இரண்டரை ஆண்டுகளில் சிறந்த செயல்திறனுக்காக தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளும் வெள்ளி, தங்க விருதுகளைப் பெற்றது கிழக்கு விவசாய அமைச்சு, ஒப்பீட்டளவில் கிழக்கில் இரண்டரை ஆண்டுகளில் ஒருவர் கூட விரல் நீட்டிக் கதைக்க முடியாத அளவுக்கு நாங்கள் செயற்பட்டிருக்கின்றோம்' எனக் கூறியிருக்கின்றார்.

கிழக்கின் முக்கியமான ஒரு துறைக்கான அமைச்சராக இருந்தவரும் தற்போது ஒரு கட்சியின் பொறுப்புவாய்ந்த பதவியில் இருப்பவருமான திரு. கி. துரைராசசிங்கம்



அவர்கள் காரியாலய மட்டத்தில் வழங்கப்படும் விருதுகள்தான் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதாக எண்ணிக்கொண்டிருக்கின்றார் போல் தெரிகிறது. உண்மையில் இந்த தங்க விருதுகளை விட மக்களால் வழங்கப்படும் பாராட்டு விருதுகள்தான் ஒரு நிர்வாகிக்கும் சரி, ஒரு அரசியல்வாதிக்கும் சரி மனமகிழ்வை ஏற்படுத்தக் கூடியது என்பதை அவர் அறிந்திருந்தும் தங்க, வெள்ளி விருதுகளால் மக்களை மூழ்கடிக்க முயல்வது எவ்விதத்திலும் நேர்மையான அரசியல் செயற்பாடாக இருக்க முடியாது.

இவ்வாறான உரைகள் சாதாரண மக்களை அவர்களது சமூகப் பொருளாதார நிலைகுறித்து அறியாமல் தொடர்ந்தும் அவ்வாறான நிலையில் வைத்துப் பேணுவதற்கான ஒரு உத்தியாகும். உண்மையில் ஒரு முன்னாள் அமைச்சர் என்றவகையில் கடந்த ஆண்டுகளை விட தங்களது இரண்டு ஆண்டுகளிலும் விவசாய உற்பத்திகள் எத்தனை சத வீதத்தினால் உயர்வடைந்திருக்கின்றது என்றும் அதே போல் விவசாய உட்கட்டமைப்புகள் எத்தனை சதவீதத்தினால் விருத்தி செய்யப்பட்டன என்றும் இதன் மூலம் எதிர்காலத்தில் விவசாய உற்பத்திகளும் அது தொடர்பான வேலைவாய்ப்புகளும் எத்தனை சதவீதத்தினால் உயர்வடையும் என்றும் இது ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகின்றபோது எந்த நிலையில் இருக்கின்றது என்பதை நம்பத் தகுந்த ஆதாரங்களுடன் உரையாற்றியிருக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் தங்களுடைய நிலையினையும் தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சிச் சிறப்பினையும் அறிந்து கொள்வார்கள். அதை விடுத்து விருதுகள் பெற்றிருக்கின்றோம் என சுயதம்பட்டம் அடித்துக் கொள்வது தங்களைத் திருப்திப்படுத்துமே தவிர மக்களை திருப்திப்படுத்தப் போவதில்லை என்பதை எமது தலைவர்கள் உணர வேண்டும்.

கிழக்கு மாகாணம் விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மாகாணமாகும். இவ்விவசாயப் பொருளாதாரத்துக்கு நீர் முகாமைத்துவம் இன்றியமையாததாகும். நீர் வளத்துக்கு குறைவில்லாத இம் மாகாணத்தில் இவ்வருட வறட்சியின் காரணத்தினால் உன்னிச்சைக்குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்து, மட்டக்களப்புக்கு நீர்வெட்டு நடைமுறையிலுள்ளதை யாவரும் அறிவார்கள். மட்டக்களப்பின் புவியியல் அமைப்பையும் ஒவ்வோர் ஆண்டு மழைவீழ்ச்சியின் அளவையும் ஒரு வருடத்துக்கு கடலில் கலக்கும் தண்ணீரின் அளவையும் அறிந்த பலருக்கு இது அதிர்ச்சியளிக்கும் செய்தியாகவே இருந்தது. ஏனெனில் கடந்த காலங்களில் விவசாய அமைச்சு மட்டக்களப்பிலுள்ள குளங்களை சரியானமுறையில் பராமரித்து சரியான நீர் முகாமைத்துவத்தினை மேற்கொண்டிருந்தால் மட்டக்களப்பிலுள்ள பல விவசாய நிலங்களை மூன்று போகங்கள் விவசாயத்துக்கு பயன்படுத்தக் கூடியதாக இருந்திருக்கும். அத்துடன் வறட்சி என்ற சொல்லையே மட்டக்களப்புக்கு அறியப்படாத ஒரு சொல்லாக ஆக்கியிருக்க முடியும்.

ஆனால் இவ்வருடத்தில் மட்டுமல்ல ஒவ்வோர் வருடமும் கோடை காலங்களில் பல கிராமங்கள் குடிநீருக்கே தட்டுப்பாடான ஒரு நிலையில்தான் இருக்கின்றன. அந்தக் கிராம மக்களின் இந்த அடிப்படைத் தேவையினைக் கூட சரியாகச் செய்து கொடுக்க முடியாதவர்கள் 'எவரும் விரல்நீட்டி கதைக்க முடியாதளவிற்கு செயற்பட்டிருக்கின்றோம்' என்று கூறுவதற்கு உண்மையில் வெட்கப்பட வேண்டும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்காக கிழக்கு மாகாணத்தில் தன்னிறைவான ஒரு விவசாய மாதிரிக்கிராமத்தையாவது உருவாக்கியிருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. சரியான திட்டமிடலும் அர்ப்பணிப்பும் கொண்ட ஆளணியினரும் இருக்கும் பட்சத்தில் கிழக்கில் பல தன்னிறைவான விவசாயக் கிராமங்களை உருவாக்க முடியும். அது தமிழர்களின் சுய பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் ஏனைய மாகாணங்களுக்கும் முன்னுதாரணமாய் இருந்திருக்க முடியும். இவ்வாறான திட்டங்களின் செயற்பாடுகளுக்காக விருதுகள் பெறப்பட்டிருக்குமாயின் அதனை அமைச்சர் மட்டுமல்ல இந்த மாகாண மக்களும் பெருமையுடன் நினைவுகூர்ந்து கொண்டாடப்பட வேண்டிய ஒரு விடயமாக இருந்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இதனைப் போலதான் மாகாணக் கல்வி அமைச்சினையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சரியாகப் பயன்படுத்தவில்லை என்பது கிழக்கின் பல கல்வியாளர்களின் கருத்தாக இருக்கின்றது. இலங்கையில் கல்வியில் மிகப் பின்தங்கிய மாகாணங்களில் ஒன்றாக கிழக்கு மாகாணம் இருப்பதுதான் இவர்கள் ஆட்சியின் சாதனையாகக் குறிப்பிட முடியும். மட்டக்களப்பில் கல்குடா கல்வி வலையம், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் போன்ற கல்விவலயங்களிலுள்ள பல கிராமங்களில் ஆரம்பப் பாடசாலைகளே இல்லை. இருக்கின்ற பல ஆரம்பப் பாடசாலைகளில் போதியளவு ஆசிரியர்கள் இல்லை, ஐந்து வகுப்புக்களைக் கொண்ட ஒரு பாடசாலைக்கு ஒரு ஆசிரியர் அல்லது இரு ஆசிரியர்களே நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களால் ஐந்து வகுப்புக்களுக்கும் பாடம் கற்பிப்பது என்பது முடியாத காரியமாகும். இதனால் தமது தொழிலில் சலிப்புத் தன்மைக்கும் விரக்திக்கும் உள்ளாகி ஏதோ தொழிலுக்காக பாடசாலைக்குச் சென்று வருகிறார்கள். மாணவர்களும் ஒழுங்கான கற்பித்தல் இல்லாததால் ஆரம்பப்பாடசாலைக் கல்வியினைப் பூர்த்தி செய்யாது இடைவிலகிக் கொள்கின்றார்கள்.

ஆரம்பப் பாடசாலைகளின் நிலை இவ்வாறு என்றால் இடைநிலைக் கல்வி பயிற்றுவிக்கும் பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு வினைத்திறனுள்ள ஆசிரியர்கள் இல்லாமல் அந்தப் பாடசாலைகள் இயங்குகின்றன. இதனால் க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைய முடியாமல் பெருமளவான மாணவர்கள் இடைவிலகிக் கொள்கின்றார்கள்.

இவ்வாறு ஆரம்பக் கல்வியும் இடைநிலைக் கல்வியும் இருக்கும் போது நாம் எமது சமூகத்தை எவ்வாறு அறிவார்ந்த சமூகமாக மாற்றமுடியும். தங்களுக்குக் கிடைக்கப் பெற்ற மாகாணக் கல்வியமைச்சினை சரியான முறையில் கையாண்டிருந்தால் தமிழ் பிரதேச ஆரம்பப் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறையின் கணிசமானளவு விகிதத்தையாவது குறைத்திருக்க முடியும். பல நூறு இளைஞர் யுவதிகளுக்கு ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் நியமனங்களையும் வழங்கியிருக்க முடியும். இதன் மூலம் எமது சமூகத்தை அறிவார்ந்த சமூகமாக உருவாக்குவதற்கான அடிப்படைகளையாவது உருவாக்கியிருக்கிறார்கள் என்று நிம்மதியடைய முடியும்.

ஆகவே தமிழ்ச் சமூகத்தை தூக்கிநிறுத்துவதற்குத் தேவையான கல்வியினையும் பொருளாதாரத்தினையும் கட்டியெழுப்பாது கிடைத்த சந்தர்ப்பங்களையும் ஒழுங்காகப் பயன்படுத்தாது 'முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பது போல்' நாம் சிறப்பான முறையில் சேவையாற்றியிருக்கின்றோம் என்று கூறுகின்றார்கள் என்றால், தமது அதிகாரத்தினை தக்கவைப்பதற்காக தமிழ் மக்களுக்கு இந்த உண்மைகளைச் சொல்லி விழிப்படைய வைத்துவிடக் கூடாது என்கின்ற கபடத்தனமான அரசியல் நடவடிக்கை என்பதைத் தவிர வேறில்லை.

## வடி குடியை அழிக்கும்

வ.துசாந்தன்

வளமான ஊரு
வரவேற்கும் மண்ணு
வயிறாற உணவு
வஞ்சனையில்லா மனசு

வட்டிக் கடையும் இல்ல
வம்புக்கும் யாருமில்ல
வழியில் பயமுமில்ல
வற்புறுத்தலும் இங்கில்ல

வக்கத்த சனங்கள்
வடிக்கிதுகள் கசிப்பு
வட்டமாக காவல்
வக்கட்டிலும் வியாபாரம்

வண்டவாளம் தெரிகிறது
வறுமையும் சூழ்கிறது
வளர்ச்சியும் குன்றுகிறது
வயதாகவில்லை மரணமே.



# சொல்லத் துணிந்தேன்! 20

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் ஒரு தேர்தல் தொகுதிக்கு 300 மில்லியன் என்ற அடிப்படையில் தனது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொகுதி அமைப்பாளர்களுக்கும் (இதில் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அடக்கம்) 'கம்பரெலிய'கிராம எழுச்சித் திட்டம் என்ற பெயரின்கீழ் நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளது.

மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுப் பின் பிரதேசசெயலகப் பிரிவு ரீதியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள இந் நிதி ஒதுக்கீட்டில் குளங்கள், கால்வாய்களை விருத்திசெய்தல்- பாதை அபிவிருத்தி- சிறிய பாலங்களை அமைத்தல் - பாடசாலைகளில் மலசலகூட வசதிகளை மேம்படுத்தல் - விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல் - நகரச் சந்தையினை விருத்தி செய்தல் - குடி நீர் வசதிகளை ஏற்படுத்தல் - சிறுவர் பூங்காவினை நிர்மாணித்தல் - மின்சார வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் - சமய ஸ்தலங்களை விருத்திசெய்தல் - சமய ஸ்தலங்களுக்குச் 'சோலார்(சூரிய சக்தி)' மின் வசதியினைப் பெற்றுக் கொடுத்தல் - தனிநபர்களின் வீடுகளை விருத்திசெய்தல் போன்ற சின்னஞ்சிறு வேலைத்திட்டங்கள் அள்ளித் தெளித்ததுபோல் ஆங்காங்கே பரவலாக முன்னெடுக்கப்படுகின்றன.
இது உண்மையிலேயே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மற்றும் பின் தொடரப் போகின்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - மாகாணசபைத் தேர்தல்களில் வாக்காளர்களைக் கவர்வதற்கான தேர்தல் தந்திரோபாயமாகவே பேசப்படுகிறது.

நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசிவதைப்போல ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த நிதி ஒதுக்கீடு கிடைத்துள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொண்டதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் 'கெட்டித்தனம்' ஒன்றுமில்லை.


**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

இவர்கள் தாங்கிப் பிடித்திருக்கும் இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் இல்லை; முக்கியமான அடிப்படை மற்றும் வாழ்வாதாரப் பிரச்சனைகளுக்கும் திருப்தியான தீர்வுகள் இல்லை; அபிவிருத்தியும் இல்லை என்ற அவப்பெயர் தங்கள் மீது விழுந்துவிட்டால் எதிர்வரும் தேர்தல்களில் தங்கள் வாக்குவங்கி மேலும் சரிந்துவிடுமே என்பதால் தங்கள் எஜமானான ஐக்கிய தேசியக் கட்சி இவர்கள் மீது பரிவு கொண்டு பிச்சை போட்டுள்ள இந்த நிதி ஒதுக்கீட்டை வைத்துக் கொண்டு ஏதோ பாரிய அபிவிருத்தி வேலைகளைச் செய்வது போலத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களிடம் 'பாசாங்கு' காட்டுகின்றனர். மாலை மரியாதைகளுடன் ஆரவாரித்துச் சென்று 'பெயர்ப்பலகை' களைத் திறந்துவைத்து ஏதோ வெட்டிப்பிளப்பதுபோல ஊடகங்களில் விளம்பரம் தேடுகின்றனர்.

கோழி ஒரு முட்டையை இட்டுவிட்டுக் கொக்கரித்துத் திரிவதைப் போல ஏதோ அபிவிருத்தியையும் அரசியல் தீர்வையும் சமகாலத்தில் முன்னெடுக்கிறார்களாம் என்ற ஆசாடபூதித்தனமான கதையளப்பு வேறு. தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிப்பது ஐக்கியதேசியக் கட்சிக்கும் தேவையாக உள்ளது. ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்குத் தேவையான அரசியலைச் செய்யாது ஐக்கியதேசியக்கட்சிக்குத் தேவையான அரசியலையே செய்து வருகிறது. இதிலே சுமந்திரனின் வகிபாகம் என்னவெனில் ஐக்கியதேசியக்கட்சிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான 'தரகு' வேலை எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்களில் கூட குசுகுசுக்கப்படுகிறது. இதற்கு அடிப்படை இருபகுதியினருக்கும் பொதுவாகவுள்ள ஏகாதிபத்திய சார்புநிலைக் குணாம்சமாகும். இதிலே மக்கள் நலன்கள் என்று எதுவுமில்லை. தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பது ஐக்கியதேசியக்கட்சிக்கு மட்டுமல்ல கிழக்கிலுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் அதுதான் தேவையாக உள்ளது. காரணம் அப்போதுதான் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை எதிர்ப்பில்லாமல் முஸ்லிம் அரசியல்வாதிகளினால் முன்கொண்டு செல்லமுடியும் என்பது அவர்களது எடுகோள் ஆகும். 'கம்பெரலிய' மட்டுமல்ல வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்திக்கானது என்ற விளம்பரத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'பனைநிதியம்' எனும் திட்டமும் ஒட்டுமொத்த வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ் மக்களையும் ஏமாற்றுகின்ற 'மாயமான்' ஆகும். புதிய அரசியலமைப்பு புஸ்வாணமாகிவிட்டது. கல்முனை விவகாரத்தில் கணக்காளர் நியமனம் கூட இன்னும் இல்லை. இந்த நிலையில் தங்களது அரசியல் கையாலாகாத்தனத்தையும் - அரசியல் ஏமாற்று வேலைகளையும் - சுயலாபச் செயற்பாடுகளையும் வெளித்தெரியாமல் மறைப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 'கம்பரெலிய' போன்ற வேலைத் திட்டங்களைப் பெரிதுபடுத்திக் காட்டித் தங்களுக்குத் தாங்களே வெள்ளை அடித்துக் கொள்கிறார்கள். இந்த வெள்ளைப்பூச்சு இன்னொரு தேர்தல் மழை வரைக்கும்தான் நின்று பிடிக்கும்.

எனவே தமிழ் மக்கள் குறிப்பாகக் கிழக்குமாகாணத் தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தொடர்ந்தும் ஏமாறாமல் இருக்க இப்போதிருந்தே தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். கிழக்குமாகாண அரசியல் அரங்கிலிருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை முற்றாக நிராகரித்துச் சமூகமாற்றத்திற்கான அரசியலை முன்னெடுக்கும் 'கிழக்குத்தமிழர் கூட்டமைப்பு' போன்ற அரசியல் சக்திகளின் பின்னால் கிழக்குத் தமிழர்கள் அணிதிரளவேண்டும். எத்தனை காலம்தான் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்) ஏமாற்றுவார் இந்த நாட்டிலே!

# அன்பை வெளிப்படுத்துவது ஒரு குற்றமா?



சம்பவம் 01

பல்கலைக்கழகத்தில் பட்டம்பெறும் மகன், பக்கத்தில் தாயும் தந்தையும் புளகாங்கிதத்துடனும் பூரிப்புடனும் நின்றிருக்கின்றனர். பட்டம் பெற்ற மகனைப் பாராட்டி இரண்டு வார்த்தை பேச முடியாமல் உதடுகள் மௌனிக்கின்றன. மகனுக்கோ பெற்றோரைக்கட்டியணைக்க வேண்டும் போல் பொங்கிவரும் உணர்ச்சிகள்; ஏனோ நீர் தெளித்த பாலாய் அடங்கிப்போகின்றன.

சம்பவம் 02

ஆஸ்பத்திரியில் பார்வையாளர் நேரம். தன் சகோதரியின் கட்டிலருகே ஓடோடி வரும் சகோதரன். சிறிது நேரம் தாமதித்து, கொண்டு வந்த உணவுப்பாத்திரத்தை கையில் கொடுத்து சுகம் விசாரிக்கிறார். தலை தடவிவிட வேண்டும் போல குறுகுறுத்த கையை மெல்ல இழுத்துக்கொண்டு விடுகின்றது ஏதோவொன்று.

சம்பவம் 03

மனைவிக்குப் பிரசவம், சுற்றிய பூப்பந்தாய் ஒரு குழந்தை அருகில். குழந்தையைக் கொஞ்சும் கணவனுக்கு மனைவியின் கை தடவி தன் அன்பைப் பகிர மிகுந்த கஷ்டமாயிருக்கின்றது.

சம்பவம் 04

தொலைக்காட்சியில் சிறுவர்களுக்கான ஓர் ஆங்கிலத்திரைப்படம். தாய் தந்தையுடன் அமர்ந்து பார்க்கும் ஓர் ஒன்பது வயதுச் சிறுமி மற்றும் ஐந்து வயதுச் சிறுவன். படத்தில் தாயைக் கட்டியணைத்து 'ஐ லவ் யூ' என்று சொல்கிறான் ஒரு சிறுவன். பார்த்துக் கொண்டிருந்த சிறுமிக்கோ வெட்கம் வந்து விடுகிறது, ஓரக்கண்ணால் தாயையும் தந்தையையும் நோக்குகிறாள். சிறுவனுக்கோ பெரும் சந்தேகம் "ஏன் என் தாய், தந்தையர் அவ்வாறு என்னிடம் சொல்வதோ, கட்டியணைப்பதோ இல்லை?'

**ஷமீலா யூசுப் அலி**

அன்பை வெளிப்படுத்துவதை ஒரு குற்றமாகப்பார்க்கும் நம் சமூகத்தின் நிலையின் ஒரு சில துளிகளே மேலே கண்டவை.

கண்ட கண்ட இடத்தில் கண்களே கூசுமளவுக்கு ஆபாசமாக அன்பை வெளிப்படுத்தும் மேலைத்தேய வழக்கம் ஒரு புறம்; மறுபுறம் அன்பை வெளிப்படுத்துவதை ஆபாசக்கண் கொண்டு நோக்கி பதுங்கிக் கொள்ளும் கீழைத்தேய சமூகம்.

உங்கள் சகோதரருடன் உங்களுக்கிருக்கும் அன்பை வார்த்தைகளாலும் பகிரங்கப்படுத்துங்கள் என்ற நபிவழி வந்த வாரிசுகள் நாம். ஆனால் இன்று சமூகத்தின் வரட்டு வேதாந்தங்களுக்கு செவிசாய்த்ததன் விளைவாகவும், வழமைக்கு மாறாக எந்த புதுவித வித்தியாசத்தினையும் செய்யக்கூடாது அது நன்மையாக இருந்த பட்சத்திலும் கூட, என்ற அதீத பிடிவாதத்தின் காரணமாகவும் நாம் நடந்து வந்த சுவடுகளை மறந்து விட்டிருக்கிறோம்.

மனிதனின் புலன்களில் தொடுகை என்ற உணர்வு பிரதானமான ஒன்று. ஆயிரம் வார்த்தைகளால் தர முடியாத ஆறுதலை ஒரு அழுத்தமான தழுவலால் தர முடியும்.

சில நேரங்களில் வார்த்தைகள் கட்டாய மௌனத்துக்குள்ளாகின்றன; அப்போதெல்லாம் உடல்களுக்கிடையிலான தொடர்பாடல் தான் சாத்தியப்படுகிறது. இதனால் தான் சமூக விஞ்ஞானத்திலும் உளவியலிலும் உடல்மொழி எனப்படுகின்ற Body Language க்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

எமது கலாச்சாரத்தில் இந்த அன்பை மொழிமூலம் வெளிப்படுத்துவதும் தொடுகை மூலம் வெளிப்படுத்துவதும் வெட்கம் தரக்கூடிய விடயமாகவும் சமயங்களில் தரக்குறைவான அம்சமாகவும் பார்க்கப்படுகின்றது.

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில், காதல் அல்லது அன்பைக்குறிக்கும் "லவ்" என்ற ஆங்கிலச்சொல் முடியுமான அனைத்து வகையிலும் வர்த்தகமயமாகிவிட்டது.

ஆண், பெண் இடையில் துளிர்த்து வளரும் எதிர்பால் ஈர்ப்பையே இங்கு அந்தச் சொல் அர்த்தப்படுத்துகின்றது என்பதே அனேகரின் அகராதி.

நான் உங்களை மிகவும் விரும்புகிறேன் அல்லது ஐ லவ் யூ என்ற வார்த்தைகளை உதடுகளால் நம் பெற்றோர்களுக்கு அல்லது குழந்தைகளுக்கு உணர்ச்சிபூர்வமாக எம்மால் ஏன் உச்சரிக்க முடியாதுள்ளது?

அன்பை பரிமாறுவதை அதை வாய் விட்டு உரியவருக்குத் தெரிவிப்பதை உற்சாகப்படுத்தும் இஸ்லாத்தின் பெயரைக்கூறிக் கொண்டே அதை நாம் ஒரு வெறுக்கத்த விடயமாக மாற்றியிருக்கிறோம்.

இன்று விரிசலடையும் குடும்ப உறவுகளை மீள இணைக்கும் வல்லமை வாய்ந்த அன்பின் தொடர்ச்சியிலான அரவணைப்பு, ஆறுதலளிக்கும் தொடுகைகள் ஆரோக்கியமானவை.

உடலுக்கும் உள்ளத்துக்கும் சந்தோசத்தையும் சாந்தியையும், நெருக்கத்தையும் இறுக்கமான பிணைப்புக்களையும் வலுப்படுத்தும் அன்பின் வெளிப்பாடுகள் அத்தியாவசியமானவை.

சில நிமிடங்கள் சிந்தியுங்கள்,

இன்று உங்கள் அன்பை வேண்டி நிற்கும் அரவணைப்பைத் தேடி நிற்கும் உள்ளங்கள் எவை? அவர்கள் மீது தயங்காது அன்பை வெளிப்படுத்துங்கள்.

இந்தப் பயணத்தின் முதலடி உங்கள் பாதங்களே.

# இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் - 'லண்டன்-95'



லண்டன்-95 என்கின்ற பெயரில் எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் தனது சிறுகதை தொகுதியொன்றை வெளியிடுகின்றார். இந்த நூலானது 'தேம்ஸ் நதி' வெளியீடாக வரவிருக்கின்றது. தனது சொந்த வாழ்வில் அரச பொதுசுகாதார துறை அதிகாரி, குழந்தைகள் நல அதிகாரி என்னும் தொழில் சார்ந்து இயங்கினாலும் மானுட மருத்துவ வரலாறு, சுகாதாரக்கல்வி போன்றவற்றோடு இலக்கியம் மற்றும் திரைப்படத்துறை போன்ற பல்துறைகளை சார்ந்த ஆளுமை கொண்டவராக இவர் திகழ்கின்றார். அத்தோடிணைந்து மனித உரிமைகள், பாலியல் சமத்துவம் போன்றவற்றுக்காக ஓயாது குரல் கொடுத்து வருபவராக இந்த இராஜேஸ்வரி தன்னை எப்போதும் முன்னிறுத்திவருகின்றார்.

இவர் ஒரு முற்போக்கு இலக்கிய மரபினுடான எழுத்துலகின் அடையாளம் கொண்டவர். அது மட்டுமன்றி ஒரு தீவிரமான சமூக அரசியல் களப்போராளியாக இன்றுவரை இயங்கிவருகின்றார்.

புகலிட இலக்கியத்தின் மூல வேர்களில் ஒருவரான ராஜேஸ்வரி பலநூறு பெண்களுக்கு முன்னுதாரணமாக, ஆதர்சமாக விளங்குபவர். இலங்கையிலும் இந்தியாவிலும் பல பல்கலைக்கழக மாணவர்கள் இவரது எழுத்துக்களை தங்களது ஆய்வுக்காக எடுத்தாண்டு வருகின்றனர். அண்மையில்கூட கொங்கு நாடு கலை அறிவியற் கல்லூரி மாணவர் பிரியா 'புலம்பெயர்ந்தோர் புதினங்களில் வாழ்வியல் சிக்கல்கள் ' என்னும்தலைப்பிலான ஆய்வொன்றினை ராஜேஸ்வரியின் எழுத்துக்களை ஆதாரமாக கொண்டு செய்துள்ளார். அதுவும் நூலுருப்பெற்றுள்ளது.

தற்போது வெளியாகின்ற 'லண்டன் -95 சிறுகதை தொகுதியானது ராஜேஸ்வரியினுடைய ஆறாவது சிறுகதை தொகுதியாகும். ஐந்து சிறுகதைத்தொகுதிகளை வெளியிட்டுள்ள அவர் இதுவரை எழுதிய சிறுகதைகள் சுமார் நூறினை தாண்டும் என அறிய முடிகின்றது. தமிழ் சிறுகதைகள்.கொம் என்கிற இணையத்தில் இவரது 84 கதைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை எட்டு நாவல்கள் வெளிவந்துள்ளன. இவை மட்டுமன்றி 'தாயும் சேயும்', 'உங்கள் உடல் உள நலம் பற்றி' என்கின்ற மருத்துவம் சார்ந்த நூல்களும் 'தமிழ் கடவுள் முருகன் வரலாறும் தத்துவமும்' என்கின்ற மானுடவியல் ஆய்வு நூலும் குறிப்பிடத்தக்கன. இவற்றில் பனி பெய்யும் இரவுகள் என்கின்ற தொகுதியானது 2015ஆம் ஆண்டு மதுலகிரிய விஜயரத்ன எனும் எழுத்தாளரினால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சில சிறுகதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. விரைவில் இரு நாவல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகவுள்ளன.

**எம்.ஆர். ஸ்டாலின் ஞானம்**

எழுத்து துறையில் மட்டுமன்றி திரைப்படம் மற்றும் ஆவணத்துறையிலும் இராஜேஸ்வரி தனது திறமைகளை வெளிக்காட்டியுள்ளார். 1985ஆம் ஆண்டு காலத்தில் இலங்கையில் தமிழர்கள் எதிர்கொண்ட படுகொலைகளை மையமாக கொண்டு அவர் உருவாக்கிய திரைப்படம் சர்வதேச தமிழ் அகதிகளின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. Escape from genocide என்னும் இத்திரைப்படமானது இலங்கை தமிழர்கள் எதிர்கொள்ளும்ஆபத்துக்களை சர்வதேசத்துக்கு எடுத்துச் சொல்லும் விதமாக எடுக்கப்பட்டது. அதே போன்று திருமண வாழ்வின் பெயரில் நடந்தேறும் ஆணாத்திக்க பாலியல் கொடுமைகளை அடிப்படையாக கொண்டு 'The private place' குறும் படத்தினையும் 1986ஆம் ஆண்டில் இவர் எடுத்து வெளியிட்டார்.

அதேபோன்று உள்நாட்டு யுத்தம் அகோரமானபோது இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை பக்கச்சார்பின்றி அம்பலப்படுத்துவதிலும் ராஜேஸ்வரியினுடைய மனிதஉரிமை செயற்பாடுகள் நடுநிலைவாய்ந்தனவாகவிருந்தன.

இங்கிலாந்தில் தொழிற்கட்சியின் அங்கத்தவரான இவர் ஈராக் யுத்தத்தில் இங்கிலாந்து எடுத்த பிழையான நிலைப்பாட்டை விமரிசனம் செய்து தனது தொழிற்கட்சியின் நீண்டகால உறுப்புரிமையை துறந்தார். 1982ஆம் ஆண்டில் லண்டனில் உருவாகிய தமிழ் மகளீர் அமைப்பின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராகவும் 1985ல் உருவாக்கிய தமிழ் அகதிகள் அமைப்பின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராகவும் முன்னின்று செயற்பட்டு பல்லாயிரம் இலங்கை தமிழ் அகதிகளின் நலன்களை உறுதி செய்வதில் பெரும் பங்காற்றியவர். இந்த தமிழ் அகதிகள் அமைப்பின் முதற் தலைவியாக அவ்வேளை தமிழீழத்துக்காக போராடிக்கொண்டிருந்த ஐந்து இயக்கங்களில் லண்டன் பிரதிநிதிகளும் ஒருமித்து இவரை நியமித்திருந்தனர் என்பது முக்கியமான வரலாற்றுச் செய்தியாகும்.

அதுமட்டுமன்றி சுமார் 25 வருடங்களுக்கு மேலாக புகலிடத்தில் இருந்து இயங்கிவரும் பெண்கள் சந்திப்பு, இலக்கிய சந்திப்பு போன்ற நிகழ்வுகளில் பங்கெடுத்தும், முன்னின்று நடாத்தியும் வருபவர்களில் இவரும் ஒருவர்.

இவரது எழுத்துலக சாதனைகள் அளப்பரியன. அந்த வகையில் 'விபவி' இலக்கியவிருது, 'சுபமங்களா'விருது, லில்லி தேவசிகாமணி விருது, 'திருப்பூர் தமிழ் சங்க' விருது, போன்றவை ராஜேஸ்வரிக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனபோதிலும் சுமார் ஐம்பதாண்டு காலமாக அயராது எழுத்துலகில் இயங்கிவரும் ராஜேஸ்வரி அவர்கள் இலங்கையில் மட்டுமன்றி புகலிடத்திலும் கூட தேவையான கௌரவம் பெறவில்லை என்பது எனது கணிப்பு.


தமிழ் கூறும் நல்லுலகில் எத்தனையோ எழுத்தாளர்கள் எத்தனையோ வெளியீடுகள் என்று இலக்கிய பரப்பு இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனபோதிலும் அதில் ஓரிருவரே சாதனையாளர்களாக முன்னிறுத்தப்படுவர் என்பது சாதாரணமான உண்மையாகும். அந்தவகையில் மிக அதிகமாகவே எழுதி மிக குறைவாகவே கவனிக்கப்படும் ஒருவராக இந்த இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் காணப்படுகின்றார். எனவேதான் இலக்கிய உலகில் வழங்கப்பட்டு வரும் தெரிவுகளும் புகழாரங்களும் மதிப்பீடுகளும் விருதுகளும் உண்மையிலேயே இலக்கிய பிரதிகளின் சுயமான வாசிப்பு அனுபவங்களை மட்டுமே அடிப்படையாக கொண்டிருக்கின்றனவா? என்கின்ற கேள்விகளும் அவ்வப்போது எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில்தான் 1970ஆம் ஆண்டு காலத்திலே புலம்பெயர்ந்து லண்டனில் குடியேறிய இவரது பூர்வீகம் என்ன? இவர் யார்? இத்தனை ஆளுமை கொண்ட இந்த பெண் எங்கிருந்து இத்தனைதூரம் பல்துறை அறிவை பெற்றுக்கொண்டாள்? என்று நோக்கவேண்டியுள்ளது. ஆம், அவரது அண்மைக்கால பேட்டியொன்றில் (குவர்னிகா- இலக்கிய சந்திப்பு தொகுப்பு வெளியீடு) அவர் தனது பூர்வீகம் பற்றி இப்படி விபரிக்கின்றார்.

"நான் 1943ஆம் வருடம் கிழக்கு மாகாணத்தில் உள்ள கோளாவில் கிராமத்தில் பிறந்தேன். தந்தையாரின் பெயர் கந்தப்பா, தாயார் கந்தையா மாரிமுத்து, எனக்கு மூன்று சகோதரிகளும் ஆறு தம்பிகளும் உடன்பிறந்தார்கள். கோளாவில் அழகிய சிறு கிராமம். கிராமத்துக்கு கிழக்கே பொங்கியெழும் வங்காள விரிகுடாவும் மேற்கில் மேகம் தொடும் மலைத்தொடர்களும் அதை தழுவிக்கிடக்கும் பரந்த பச்சை வயல் வெளிகளும் தெற்கில் செல்லமாக நடைபோடும் தில்லையாறும் இருந்தன."

ஆம் அந்த தில்லையாற்றை கதைக்களனாக கொண்ட அவரது கதை மாந்தர்கள் உலாவரும் பிரதியே "தில்லையாற்றங் கரையில்" என்கின்ற நாவல். அறுபது எழுபது வருடங்களுக்கு முன்னரான மட்டக்களப்பின் சமூக, அரசியல் சூழலை நமது கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தும் வல்லமைவாய்ந்த ஒரு வரலாற்று புனைவு அது.

---



# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

*அத்தியாயம்-15*

**கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா**

பேச்சுத்துறையில் இராஜதுரை (சென்ற இதழின் தொடர்ச்சி)

அப்பேச்சு அத்தாயின் வயிற்றிலே பிறந்த பிள்ளைகளுக்கும் தாயின் உடன் பிறந்த சகோதர சகோதரிகளுக்கும் இனசன சுற்றத்தார்களுக்கும் பிடிக்குமே தவிர எல்லாருக்கும் பிடிக்காது. நம் எல்லாரையும் நாட்டிலுள்ள அனைவரையும் பெற்றது ஒரே தாயானால் அவளைப்பற்றிப் பேசுவது அனைவருக்கும் பிடிக்கலாம். எனவே நம்மைப் பெற்ற தாய்மார்களையும் அவர்களைப் பெற்ற தாயைப்பற்றியும் பேசலாமென்று நினைக்கிறேன். அந்நிலையைப் பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் என்னும் தலைப்பின் கீழ் பேசலாமென்று முன்வந்தேன்.

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் என்றவுடன் உங்களைப் பெற்றதாயின் உருவமும் பிறந்த நாடான மட்டக்களப்பின் தோற்றமும் உங்கள் கண்ணுக்குள் தோன்றியிருக்கலாம். வளைந்து வளைந்து செல்லும் வாவிக்கூட்டங்களும் அவற்றுள் மறைந்து கிடந்த இன்னிசைநாதம் எழுப்பும் நீரரமகளிரின் நினைப்பும் தோன்றலாம். யாழ்நூலும் அதை அமைத்த விபுலானந்த அடிகளின் உருவும் திருவும் மனக்கண் முன் நிழலாடலாம். தங்கக் கதிர்களைத் தாங்க முடியாது. தாங்கிக்கொண்டு சரிந்து கிடக்கும் நெற்பயிர்கள் பாளைச் சிரிப்பைக் காட்டிக் கொள்ளும் பருவப் பெண்களைப் போல் ஆற்றோரங்களில் ஒய்யாரமாக ஆடி அசையும் தென்னை மரச்சோலைகள் வெற்றிலைக் கொடிகள் எல்லாம் இந்நேரத்தில் உங்கள் மனக்கண்முன் தோன்றியிருக்கும். மட்டக்களப்பைப் பற்றிப் பேசுவதை- அது நம்மில் ஒரு தாயைப் பற்றிப்பேசுவதற்கு ஒப்பாகும்.

மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி ஆகிய பல நூறு பகுதிகளையும் தன்னகத்தே உள்ளடக்கிய பிறந்த நாட்டைப் பற்றிப் பேசுவது சாலப் பொருந்தும். அதாவது நம்மை ஈன்றெடுத்த தாயையும் ஈழத்து மாதாவையும் பற்றிப் பேசுகின்றேன்.

நம் தாயும் தந்தையர்களும் அவர்கள் முந்தையர்களும் பல நூற்றாண்டுகள் நீரினில் ஆடி நிலவினில் பாடி சோலையில் ஆடி மகிழ்ந்த நம்சொந்த திருவிடத்தை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று ஏன்? கூறுகின்றேன் என்றால் இந்நாட்டில் அன்று எப்படி வாழ்ந்தோம் இன்று எப்படி வாழ்கின்றோம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்வதற்காகத்தான்.

பெற்றதாய் ஒவ்வொருவருக்கும் எப்படிப் பெரியவளோ அப்படி அதைவிட மேலான சிறப்பிற்கும் மதிப்பிற்குமுரியது பொன்னாடு. தாய் இல்லாது நாம் பிறந்திருக்க முடியாது. தாயகம் இல்லாது அவர்களும் பிறந்திருக்க இயலாது.

''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவவானிலும் நனி சிறந்தனவே''

என்று பெரியவர்கள் வாழ்த்திப் போற்றியது அவற்றின் பெருமையைத் தெரிந்ததனாலேயே. அந்நாட்டின் பூர்வீக வரலாற்றைத் தெரிந்து கொள்ள முயல வேண்டும். அந்நாட்டில் அறம் வளர்த்து மறம் கடிந்து வாழ்ந்த அறநெறியாளர்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்நாட்டில் கலையைக் கண்ணிலும் மேலாகக்காத்து அதற்கு கலைக்கூடம் கட்டிப் போற்றி வளர்த்த கலைஞர்களையும் காவலர்களையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்நாட்டில் விளைந்த அகிலையும் தேக்கையும் முத்தையும் பவளத்தையும் ஏற்றிக் கொண்டு அலைகடலைக் கிழித்தவண்ணம் உலகமளாவிய வணிகக் கப்பல்களையும் அவற்றிற்கு காவலாக இருமருங்கும் அணிவகுத்துச் சென்ற போர்க் கப்பல்களையும் அவற்றை ஆக்கிய விற்பன்னர்களையும் அறிந்து

தொடர்ச்சி பக்கம்..15

# 'பிரித்தானியாவில் தமிழ் மொழி வளர்ச்சியின் ஆரம்ப சரித்திரம்'

**இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்**

ஒரு மொழியின் வளர்ச்சி என்பது,அந்த மொழியைப் பேசும் மக்களின் திறமையான,செயற்பாடுகளின் தொடர்ச்சியை அடிபடையாகக் கொண்டது.தமிழின் தொன்மையும் அந்த மொழியில் தமிழர்கள் வைத்திருக்கும் நேசமும் பக்தியும் இன்று உலகெங்கும் தமிழ் வளர்ந்து கொண்டிருப்பதற்கு மூலகாரணியாகவிருக்கின்றன.

இலங்கைத் தமிழர்கள் முற்போக்குத் தமிழ் இலக்கிய சங்கத்தை 1942ம் ஆண்டிலேயே யாழ்ப்பாணத்தில் தொடங்கியவர்கள். மேற்கு நாடுகளில், முக்கியமாகப் பிரித்தானியாவை மையமாக வைத்துத் தமிழின் மகிமையை உலகுக்குப் பரப்புவதில்; முன்னணி நிலை எடுத்தவர்கள்,1950ம் ஆண்டு தொடக்கம்,மேற்படிப்பு, உத்தியோகம் போன்ற காரணங்களால் லண்டனிற் குடியேறிய இலங்கைத் தமிழர்களாகும்.
இவர்களால் லண்டனில் தொடங்கப் பட்ட,வானொலிகள்,பத்திரிகைகள்,பாடசாலைகள்,அச்சுக் கூடங்கள்,கோயில்கள்,பல தரப்பட்ட தமிழ்ச் சங்கங்கள்,நடத்திய தமிழ் மகாநாடுகள் என்பன உலகம் பூராவும் தமிழ் பரந்தொலிக்க அத்திவாரமிட்டன.

லண்டனில் இலங்கைத் தமிழர்கள்:
1956ம் ஆண்டுக்குப் பின்,இலங்கையில் 'சிங்களம் மட்டும்'சட்டம் வந்து தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்துக் கொடுக்காததால் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆங்கிலேயத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் பிரித்தானியா கொடுத்த வேலை வாய்ப்புக்களால் லண்டனுக்கு வந்தார்கள்.
ஆங்கிலப் பட்டதாரிகளாகவிருந்தாலும் 1960 ஆண்டின் பிற்பகுதியில் லண்டன் வந்த இளம் தமிழர்களிடையே,இலங்கையில் வளர்ந்து கொண்டிருந்த முற்போக்கு இலக்கியத் தூண்டுதலால் தமிழுணர்வு பரந்திருந்தது.

லண்டன் சோ.ஆ.எஸ். பல்கலைக் கழகம்:1916ம் ஆண்டிலிருந்து ஆங்கில பேராசிரியர்களால் தமிழ்மொழி இங்கு கற்பிக்கப் பட்டது. டாக்டர் பொன் கோதண்டராஜா.டாக்டர் மார் போன்றோர் பல அரியசேவைகளைத் தமிழுக்குச் செய்திருக்கிறார்கள்.

லண்டன் தமிழ்ச் சங்கம்::சென்ற நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலிருந்து இந்தியத் தமிழர்களால் தமிழ் மொழிபற்றிய செயற்பாடுகள் லண்டனில் இடம்பெற்றிருக்கின்றன என்ற தகவல்கள் இருக்கின்றன. அக்கால கட்டத்தில் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு கட்டிடம் இல்லாததால் தமிழ் சார்ந்த கூட்டங்கள் லண்டனில் உள்ள 'இந்தியா கிளப்பில் அவ்வப்போது நடந்ததாகத் தெரிகிறது. ஆனால் தொடர்ச்சியான நிகழ்ச்சிகள் 1960ம் ஆண்டு தொடக்கம் நடந்து வருகின்றன.
கிழக்கு லண்டனிலிருக்கும் இச்சங்கத்தின் நிர்வாகத்தில் முதன்மையாயிருந்த,கோவை மாநகரைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் கே.எஸ் சுப்பிரமணியம்,அவரின் செயலாளராகவிருந்த இலங்கைத் தமிழரான .திரு.ந.சச்சிதானந்தன் போன்றவர்களால்,1972-76 கால கட்டத்தில்,ஒட்டுமொத்த லண்டன்வாழ் தமிழர்களுக்காகவும்,சாதி,சமய,இன வேறுபாடற்ற முறையில் தீபாவளி,பொங்கல்,நத்தார் விழாக்கள் கொண்டாடப்;பட்டன.1974ம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து லண்டன் வந்திருந்த திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களும் சங்க நிகழ்வுகளில் கலந்துகொண்டிருக்கிறார்.
அத்துடன்,லண்டன் தமிழ் சங்க நிகழ்வுக்கு இந்திய முதல் கவர்னராகவிருந்த,ஸ்ரீ. சி.இராஜகோபாலாச்சாரியர் அவர்களும் வருகை தந்திருக்கிறார்கள்.

1979ம் ஆண்டு பிரண்ட் தமிழ்ச் சங்கம் உருவாக்கப்பட்டு இன்று வரை,தமிழ் மொழி,கலை சார்ந்த விடயங்கள் வளர உதவிக்கொண்டிருக்கிறது.
'சைவ சித்தாந்தக்கழகம்:தமிழ்த் தேவார திருவாசக பாரம்பரியத்தை வளர்க்க 1980ல் திரு.கி.ஞானசூரியன் தலைமையில்,டாக்டர். எஸ்.நவரத்தினம் உபதலைவருடன். மற்றும்,டாக்டர்.கே. ஆறுமுகம்,டாக்டர். சி.சொர்ணலிங்கம்,திரு.கனகசுந்தரம் போன்றோரால் ஆரம்பிக்கப் பட்டது.

பி;.பி.சி உலக சேவையில் தமிழும் அக்காலகட்டத்தில் லண்டனில் உதயமாகியிருந்தது.அதனால் உலகம் பரந்த தமிழர்கள் தமிழ் சேவையூடாக லண்டனில் வாழும் தமிழர்கள் பற்றிய செய்திகளைக் கேட்டார்கள்.அக்கால கட்டத்தில் பி.பி.சி தமிழ் சேவையில் திரு. சங்கரமூர்த்தி,திரு.சோ.சிவபாதசுந்தரம்,திரு. சுந்தரலிங்கம்,திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் போன்றோர் ஈடுபட்டிருந்தார்கள்.

லண்டன் சைவ இந்து சங்கம்: திரு. சோ.சபாபதிப்பிள்ளையவர்களால் ஆரம்பிக்கப் பட்டது.

'லண்டன் முரசு'-தமிழ்ப் பத்திரிகையான லண்டன் முரசு 1970ம் ஆண்டு,இலங்கையைச் சேர்ந்த திரு.ச.சதானந்தன்,இந்தியாவைச் சேர்ந்த பேராசிரியர் கே.எஸ்.சுப்பிரமணியம் போன்றோரால் தொடங்கப் பட்டது. மேற்குலகத் தமிழ்ப்; பத்திரிகை வரலாற்றில் லண்டனில் முதலில் ஆரம்பிக்கப் பட்ட தமிழ்ப் பத்திரிகையான லண்டன் முரசு.இப் பத்திரிகை ஆரம்பத்தில் தாயகச் செய்திகளுடன் தொடங்கியது. 1974ம் ஆண்டில் இலங்கையில் நடந்த 'அகில உலகத் தமிழ் மகாநாடு' பற்றிய செய்திகளை கலாநிதி கோபன் மகாதேவா இலங்கையிலிருந்து எழுதினார்.அப்போது லண்டனில் வாழ்ந்து கொண்டிருந்த டாக்டர் கே.எஸ்.சுப்பிரமணியன் அவர்களின்,தமிழ்,இலக்கிய,தத்துவக் கட்டுரைகளும் தொடர்ந்து வந்தன. காலக்கிரமத்தில் பல இலக்கியப் படைப்புக்களையும் வெளியிட்டது. இந்தப் பத்திரிகையில் தமிழ்ப் பெண் எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிய' உலகமெல்லாம் வியாபாரிகள்'(1978) என்பதுதான் மேற்குலகில் முதலில் வந்த தமிழ்த் தொடர்கதையாகும்.

1972ம் 'கல்வியில் தரப்படுத்து தலை'இலங்கை அரசு முன்னெடுத்ததால் பல்கலைக்கழகங்களில் இடம் கிடைக்காத தமிழ் இளைஞர்கள் பெருவாரியாக லண்டனுக்கு வந்தார்கள். இவர்கள் இலங்கையில் வாழ்ந்த காலகட்டத்தில் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில்,சமுதாயம்,மொழி மேன்மை சார்ந்த பல இலக்கியப் படைப்புக்கள் பெருவாரியாக வரத் தொடங்கின.1974ம் ஆண்டு காலத்தில் லண்டனுக்குப் படிக்க வந்த தமிழ் மாணவர்களின் குரல்கள்,'லண்டன் முரசு' பத்திரிகையூடாகத் தமிழ் மக்களைச் சென்றடைந்தது.
1976ம் ஆண்டின் நடுப்பகுதியில் எங்களைப் போன்ற சில இலக்கிய ஆர்வலர்களால் சிறிய அளவில் இலக்கியக் கருத்தரங்குகள்,ஈரோஸ் இராஜநாயகம் அவர்களின் வீட்டில் நடைபெற்றன.
1976ல் திரு. அன்டன் பாலசிங்கம் அவர்களால்,'தமிழ்த் தேசியமும் சுயநிர்ணய உரிமையும்' என்ற தமிழ்ப்புத்தகம் வெளியிடப்பட்டது.




1977ம் ஆண்டு லண்டனில் வாழ்ந்த தமிழ் மாணவர்களால்,',ஈழமாணவர் பொது மன்றம்' என்ற அமைப்பு தொடங்கப் பட்டது. இதில், திரு.யோக சங்கரி,திரு எஸ். தம்பையா,ஈரோஸ்(ஈழப் புரட்சி அமைப்பு) திரு.இ..இரத்தினசபாபதி போன்றவர்கள் ஈடுபட்டார்கள்.இவர்களின்,'அனுபந்தம்' என்ற படைப்பு, டாக்டர் ஆர்.நித்தியானந்தனின் மதிப்புரையுடனும்,காலம் சென்ற திரு.அ.அமிர்தலிங்கம் எம்.பி. (அக்காலத்தில் இலங்கையரசில் எதிர்க் கட்சித் தலைவராகவிருந்தவர்),திரு ட்ரெவர் பிலிப் (பிரித்தானிய மாணவ சங்கத் தலைவர்) போன்றோரின் குறிப்புக்களுடனும் பதிவிடப் பட்டது.

மிடில்செக்ஸ் பல்கலைக்கழக மாணவர்களின்'ஈழவிடுதலை'தமிழ்க் கையெழுத்துப்பத்திரிகை திரு.என்எஸ். கிருஷ்ணனால் வெளியிடப்பட்;டது.

1978ல் டெலோ இயக்கத்தினரால்,' புரட்சி'என்ற தமிழ்ப் பத்திரிகை வெளியிடப்பட்டது. 1977ம் ஆண்டு தந்த இனக்கலவரத்தின் பின்னர்;, மேலும் பல் துறைத் தமிழர்கள் லண்டன் வந்தார்கள். அத்துடன் மேற்படிப்புக்காக அடிக்கடி லண்டன் வரும் கலாநிதி சிவசேகரம் போன்ற பேராசிரியர்களும்,80ம் ஆண்டு முற்பகுதியில் லண்டனில் பல இலக்கியக் கலந்துரையாடல்களுக்கு வித்திட்டார்கள்.
தி.மு.க.பிரமுகர் செஞ்சி இராமச்சந்திரன் சொற்பொழிவுக்காக டெலோ திரு. சிறிகங்காதரனால் லண்டனுக்கு 1982ல் அழைக்கப்பட்டார்.

தமிழ்ப் பாடசாலைகள்: 1979ம் ஆண்டில் லண்டனில் முதலாவது தமிழ்ப் பாடசாலை மேற்கு லண்டனிற் தொடங்கப் பட்டது. இதை திரு..ஜே.ரி.தாமோதரம்,டாக்டர் ஆர். நித்தியானந்தன் போன்றவர்கள் முன்னின்று நிறுவினார்கள்.கிழக்கு லண்டனில் சிங்கப்பூர்-இந்தியத் தமிழர்களால் தொடங்கப் பட்ட,தமிழர் முன்னேற்றச் சங்கத்தின் நீட்சியான அமைப்பாகத் திருவள்ளுவர் பாடசாலை இக்கால கட்டத்தில் தொடங்கப் பட்டது. இன்று லண்டனில் ஏறத்தாள முப்பது தமிழ்ப் பாடசாலைகளில் 6000 மேலான சிறார்கள் தமிழ் கற்கிறார்கள்.

தமிழ்த்தகவல் நடுவம்:1979ம் ஆண்டு லண்டனில் தமிழர் தகவல் நடுவம் தி.கே.கந்தசாமி, திரு.வை.வரதகுமார் போன்றோரால் ஆரம்பிக்கப் பட்டது. இது அகில உலக மக்களுக்கும் செய்தி பரவும் நிறுவனம் மட்டுமன்றி,பல கருத்தரங்கங்களை முன்னின்று நடத்தும் நிறுவனமாக இன்றும்; செயற் பட்டுக் கொண்டிருக்கிறது.

சைவ சமயக் கோயில்கள்: 1980ம் ஆண்டு வரை,லண்டனில் இலங்கைத் தமிழர்களுக்கென எந்தக் கோயிலும் இருக்கவில்லை. விம்பிள்டன் என்ற இடத்தில்,லண்டன் முரசு பத்திரிகையின் ஆசிரியரின் தந்தை திரு. சோ.சபாபதிப்பிள்ளை அவர்களால் ';லிட்டில் ஹால்'என்ற இடத்தில் 1970ம் ஆண்டின் பிற்பகுதியில் கடவுள் சிலை வைத்து வணக்கங்கள் ஆரம்பிக்கப் பட்டன. காலக்கிரமத்தில்,லண்டன் ஹைகேட் என்ற இடத்தில் திரு.சோ.சபாபதிப் பிள்ளையவர்களால் தொடங்கப் பட்ட திருமுருகனின் கோயிலில்,தமிழ்த் தேவார திருவாசக பாரம்பரியங்கள் தொடர்ந்தன. பிறப்பு தொடக்கம் இறப்புவரையும் தமிழரின் சடங்குகள் தமிழில் நடத்தும் செயல்கள் ஆரம்பிக்கப் பட்டன.இன்று லண்டனில் முப்பதுக்கும் மேலான அளவில் கோயில்கள் இருக்கின்றன. தமிழில் பூசை நடக்கும் கோயில்கள் ஒன்றிரண்டு மட்டுமே. ஆரம்பத்தில் லண்டன் வந்த தமிழர்களான திரு.சோ. சபாபதிப்பிள்ளை போன்றவர்களால் சைவத்தையும் தமிழ் சித்தாந்தையும் வளர்க்க எடுத்த முயற்சிகள் அளப்பரியன.

மனித உரிமைக் குழுக்கள். 80ம் ஆண்டுகள் தொடக்கம் இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இலங்கையரசு முடக்கிவிட்ட அரச பயங்கரச் செயல்களைக் கண்டித்து. லண்டன் வாழ் தமிழர்கள் தங்கள் கண்டனக் குரல்களை எழுப்பினார்கள் இவர்களில் திரு. எஸ்.மகரசிங்கம்(தமிழ் அக்சன் குறுப்) முக்கியமானவர்;. 1982ம் ஆண்டு,எழுத்தாளர் இராஜேஸ்வரியின் பாலசுப்பிரமணியத்தின்; தலைமையில்'தமிழ்ப் பெண்கள் அமைப்பு தொடங்கப் பட்டது. அவர்களால் 'தமிழ்மாது'என்ற பத்திரிகையும் அச்சிடப்பட்டது.

இலங்கையில் தொடர்ந்து கொண்டிருந்த இன ஒடுக்கலால் 1983ம் ஆண்டு தொடக்கம்,தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் லண்டன் வந்தார்கள். இக்கால கட்டத்தில் 10.000 லண்டனில் வாழ்ந்ததாகக் கணிக்கப் பட்டது. இன்று கிட்டத்தட்ட 300.000 இலங்கைத் தமிழர்களால்,லண்டனில் தமிழ் வளர்ச்சியின் பரிமாணம் பன்முகத் தன்மையெடுத்து வளர்கிறது.இன்று திரு.இராஜகோபால் அவர்களால்;,'புதினம்' போன்ற பத்திரிகைகள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன.

# உயிர்த்த ஞாயிறில் உயிரிழந்தவர்களுக்கு அம்மன் ஆலயம் நினைவுத்தூபி







உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் மட்டக்களப்பு புலையவெளியில் நினைவுத்தூபி ஒன்று கடந்த திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

புலையவெளி, அன்னை பேச்சியம்மன் ஆலயத்தினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த நினைவுத்தூபியை சமூக, சமயத் தலைவர்கள் திறந்துவைத்தனர்.

லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் நிதியுதவியில் புலையவெளி மற்றும் தம்பனம்வெளி கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவது அறிந்ததே.

NCL
NELSON COLLEGE LONDON

LONDON METROPOLITAN UNIVERSITY

Are you 18+ and have GCSEs or work experience?

Do you have A levels but missed your place at university?



- Foundation Degree Business (London Metropolitan University)
- Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
- HND Business (Pearson)
- HND Hospitality Management (Pearson)
- BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
- BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)

Student Finance Available

Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556

# விளையாட்டு

## ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடருக்காக பாகிஸ்தான் செல்கிறது இலங்கை அணி





பத்து வருடங்களின் பின் பாகிஸ்தான் மண்ணில் சற்று நீண்ட சர்வதேச தொடர் ஒன்றில் கலந்துகொள்வதற்காக இலங்கை கிரிக்கட் அணி எதிர்வரும் செப்டம்பர் மாதம் இறுதியில் பாகிஸ்தானுக்கு செல்லவிருக்கின்றது.

3 ஒருநாள் மற்றும் 3 இருபதுக்கு-20 போட்டிகளை கொண்ட அத் தொடரின் முதலாவது போட்டி செப்டம்பர் 27-ம் திகதி நடக்கவுள்ளது. ஒருநாள் போட்டிகள் கராச்சி மைதானத்திலும் இருபதுக்கு-20 போட்டிகள் லாஹூர் மைதானத்திலும் நடக்கவுள்ளன.

முன்னதாக இப் போட்டித் தொடரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு இலங்கை கிரிக்கெட் சபை செயலாளர் மொஹான் டி சில்வா தலைமையில் ஐந்து பேர் கொண்ட பாதுகாப்பு அதிகாரிகள் கடந்த 8ஆம் திகதி பாகிஸ்தானுக்கு சென்று, அந் நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். போட்டி நடைபெறவுள்ள கராச்சி மைதானத்திற்குச் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் ஆராய்ந்து பார்த்தனர். இதன்போது, இலங்கை கிரிக்கெட் அணிக்கு விமான நிலையம் முதல் மைதானம் வரை சர்வதேச தரத்திலான முழுமையான பாதுகாப்பு வழங்கப்படும் என அந்நாட்டு பாதுகாப்பு தரப்பினர் உறுதியளித்திருந்தனர்.

**யாசீர் அரபாத்**

இதனைத் தொடர்ந்து இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இவ்வருட இறுதியில் இடம்பெறவுள்ளது.

## இன்னிங்ஸ் வெற்றியுடன் தொடரை சமநிலையில் முடித்தது நியூசிலாந்து அணி




நியூசிலாந்து அணிக்கெதிராக கொழும்பு பி.சரா ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற 2-வது டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்திருந்தது. இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனன்ஜய டி சில்வாவின் சதத்துடன் 244 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி டொம் லேதம மற்றும் பிஜே வெட்லிங்கின் ஆகியோரின் சதத்தின் உதவியுடன் 431 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர் 187 ஓட்டங்கள் பின்னடைவில் இருந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 5-ம் நாள் மதியபோசன இடைவேளையின் போது 33 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. பின்னர் தோல்வியில் இருந்து விடுபட இலங்கை அணி முயற்சித்தும் நியூசிலாந்து அணியின் பந்துவீச்சாளர்கள் அதனை முறியடித்து இலங்கை அணியை 187 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி இன்னிங்ஸ் வெற்றியனை பெற்று தொடரை 1-1 என சமப்படுத்தனர். போட்டியின் ஆட்ட நாயகனாக டொம் லாதம் தெரிவானதோடு தொடரின் நாயகனாக வொட்லிங் தெரிவானார்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## ஆஷஸ் டெஸ்ட் தொடர் விறுவிறுப்பான போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.



இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹெட்டிங்லே மைதானத்தில் கடந்த 22-ம் திகதி தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட் பந்து வீச்சினை தெரிவு செய்தார். அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா அணி ஆர்ச்சரின் (6 விக்கட்) அபார பந்து வீச்சால் 179 ஓட்டங்களில் சுருண்டது.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியா வேகப்பந்து வீச்சாளர்களை சமாளிக்க முடியாமல் 67 ஓட்டங்களில் சுருண்டது. ஹசில்வுட் ஐந்து விக்கட்டுக்களையும், பெட் கம்மின்ஸ் 3 விக்கட்டுக்களையும், பேட்டின்சன் 2 விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.

112 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா அணி மார்னஸ் லாபஸ்சேக்னேயின் (80) சிறப்பான ஆட்டத்தால் 246 ஓட்டங்களை பெற்று மொத்தமாக 358 ரன்கள் முன்னிலை பெற்று இங்கிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக 359 ஓட்டங்களை நிர்ணயித்தது.

பின்னர் 2-வது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியை பென் ஸ்டோக்ஸ் இறுதிவரை போராடி வெற்றி பெறச்செய்தார். இங்கிலாந்து அணி சார்பாக பென் ஸ்டோக்ஸ் ஆட்டமிழக்காமல் 135 ஓட்டங்களையும்
ஜோ ரூட் 75 மற்றும் டென்லி 50 ஓட்டங்களையும் பெற்றனர். இந்த வெற்றியின் மூலம் ஆஷஸ் தொடரை இங்கிலாந்து 1-1 என சமநிலைப் படுத்தியுள்ளது. தொடரின் 4-வது போட்டி செப்டம்பர் 4-ம் திகதி இடம்பெறவுள்ளது.

## ''பாண்டிருப்பு 2019'' சம்பியன் கிண்ணத்தை காந்தி ஜீ அணி வென்றது



காரைதீவு நிருபர் சகா

RVS கலைக்குழு நடாத்திய "பாண்டிருப்பு 2019" சம்பியன் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் காந்தி ஜீ அணி வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியுள்ளது.

பாண்டிருப்பில் உள்ள ஆறு கழகங்களுக்கிடையில் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி பாண்டிருப்பு பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் யங்றோவர்ஸ் அணியும் காந்திஜி அணியும் போட்டியிட்டன ஆறு ஓவர் உடையதாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காந்திஜி அணி மூன்று விக்கட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப்பெற்றிருந்தனர் 82 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு களமிறங்கிய யங்றோவர்ஸ் அணி ஆறு விக்கட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களைப்பெற்றனர்.

இச்சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாக காந்திஜீ அணியைச்சேர்ந்த மிதுசன் தெரிவானார்.

போட்டிகளைத்தொடர்ந்து வெற்றி பெற்ற அணிகளுக்கும் வீரர்களுக்குமான வெற்றிக்கிண்ணங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன இந் நிகழ்வின்போது பாண்டிருப்பு இந்து மகாவித்தியாலயத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மூன்று மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

## துப்பாக்கி சுடுதலில் சாதித்த தமிழ் பெண்



உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதலில் தமிழ் பெண்ணான இளவேனில் வளரிவான் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

பிரேசிலின் ரியோ டி ஜெனேரியோவில் ஐ.எஸ்.எஸ்.எஃப் உலகக் கோப்பை சுடுதல் போட்டி நடந்து வருகிறது. இதில் பெண்களுக்கான துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார் இளவேனில் வளரிவான் . 10 மீட்டர் ஏர் ரைஃபில் பிரிவில் இளவேனில் 251.7 புள்ளிகள் எடுத்து முதலிடத்தை பிடித்திருக்கிறார்.படத்தின் காப்புரிமைELAVENIL VALARIVAN
இவருக்கு அடுத்தபடியாக பிரிட்டனைச் சேர்ந்த மெக்கின்டோஷ் சியோனைட் 250.6 புள்ளிகள் எடுத்து இரண்டாமிடம் பிடித்து வெள்ளிப்பதக்கம் வென்றார்.
தைவானைச் சேர்ந்த லின் யிங்-ஷின் 229.9 புள்ளிகள் எடுத்து மூன்றாமிடம் பிடித்தார் .
72 நாடுகளில் இருந்து 541 பேர் பங்கேற்கும் இந்த உலகக்கோப்பையில் பல்வேறு பிரிவுகளில் வீரர்கள் கலந்து கொள்கின்றனர். இதில் வெற்றி பெறுபவர்களுக்கு 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கும்.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:

" அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை "

## கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வரலாறு



திருமூலரால் சிவபூமி என அழைக்கப்பட்ட இலங்கைத் திருநாட்டில் பல சிவத் தலங்களும் அமைந்து இணையில்லா அற்புதங்களையும், அருளையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. கிழக்கிலங்கையிலே மீனினங்கள் இசைபாடும் இயற்கை எழில் கொஞ்சும் மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கே 18கிலோ மீற்றர் தொலைவில் மருதநில மண்வாசமும், கிராமத்து அழகுடனும் கொக்கட்டிச்சோலையில் சுயம்பாக தோன்றி அளவில்லா அற்புதமும், அருள் மழையும் பொழியும் வரலாற்று சிறப்புமிக்க ஆலயமே கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆகும்.

இவ்வாலயத்தின் வரலாறு மிகப்பழமையானது என்பதை கல்வெட்டுக்கள் மூலமாகவும், கர்ணபரம்பரைக் கதைகள் ஊடாகவும், நூல்கள் வாயிலாகவும் அறிய முடிகின்றது. அவ்வகையிலையே குணசிங்கன் என்னும் அரசன் மட்டக்களப்பினை ஆளும் போது கலிங்க ஒரிசா தேசத்தை அரசு புரியும் குகசேனனுடைய புத்திரியாகிய உலகநாச்சி என்பவள் மண்முனையை சிற்றரசு புரிந்த வேளையில் கொக்கட்டி மரங்களால் சூழப்பட்ட ஒரு வனத்திலே திகடன் எனும் வேடுவன் தேன் எடுக்கச் சென்று அங்கு மரத்தினை வெட்டியபோது அதிலிருந்து இரத்தம் பாய்ந்து ஓடுவதைக் கண்டு பயந்து, ஓடிச்சென்று அரசி உலகநாச்சியிடம் தெரிவித்தான். பிற்பாடு உலகநாச்சி அதை பார்வையிட்டு அது ஒரு சிவலிங்கம்தான் என உணர்ந்து முதலில் ஒரு கொத்துப்பந்தலிட்டு ஒரு ஆலயம் அமைத்து வடநாட்டில் இருந்து பட்டர்கள் மூவரை அழைத்துவர, அவர்கள் அங்கு பூசை செய்தனர் என்பது வரலாறு.

கி.பி.12ம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் தோற்றம் பெற்று வளர்ந்த வீர சைவ வழிபாடு இங்கு தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றது. வீர சைவம் என்பது சாதி முறைக்கு எதிராக சமத்துவத்தை பேண வேண்டும் எனும் இலட்சியத்தோடு பசவேசரால் கர்நாடகத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இச்சமயம் கலிங்கமாகோனால் கி.பி.13ம் நூற்றாண்டில் இவ்வாலயத்திற்கு கொண்டுவரப்பட்டது. இங்கு பூசை செய்பவர்களை சங்கமர் என அழைக்கும் மரபும் உண்டு.

இவ்வாலயத்தின் உற்சவமானது ஆவணி மாதத்தில் வருகின்ற வளர்பிறை பிரதமையும் உத்தர நட்சத்திரமும் கூடிய திருநாளில் திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சகல குடித்திருவிழாக்களும் நடைபெற்று பூரணைக்கு பிற்பாடு வரும் ஞாயிற்றுக்கிழமை தேரோட்டமும் அன்றிரவு திருவேட்டையும் மறுநாள் காலை தீர்தோற்சவமும் நடைபெறும்.

கிழக்கிலங்கையில் தேரோடும் ஓர் ஆலயம் என்பதினால் இவ்வாலயத்தின் உற்சவத்தினை தேரோட்டம் என மக்கள் அழைப்பதுமுண்டு. இத் தேர்கள் தர்மசிங்க மன்னனால் சோழநாட்டில் இருந்து கி.பி 958ல் சிற்பிகளை வரவழைத்து மூன்று தேர்களையும் அமைத்தான் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. அதில் தேரோட்ட நிகழ்வு ஒன்றில் ஏற்பட்ட தெய்வக் குற்றம் காரணமாக ஓர் தேர் பாதையை விட்டு விலகி ஆலயத்திற்கு தென்மேற்கு திசையில் உள்ள மதிலை உடைத்து ஆற்றுக்குள் விழுந்து விட்டதாக முன்னோர்கள் குறிப்பிடுகின்றனர். மிகுதியாக உள்ள இரண்டு தேர்களும் இன்றுவரை தேரோட்டத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன. பல கலைசிற்பங்கள் நிறைந்த சித்திரத்தேரிலே உமையவள் சகிதம் சிவபெருமானும் மற்றைய சிறிய தேரில் பிள்ளையாரும் எழுந்தருளி பக்தர்களால் வடம்பிடித்து வீதிவலம் இழுத்து வரும் காட்சி அற்புதமாய் இன்றுவரை இடம்பெற்று வருகின்றது.


முக்குக தேசம் என அழைக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்திலே படுவான்கரைப்பிரதேசம் முழுக்க முழுக்க கலிங்க ஆட்சிக்குட்பட்ட பிரதேசமாகும். இப்பகுதியின் பல முக்கிய கோயில்களிலும் கலிங்க மகோன் வகுத்த சட்ட திட்டங்களே இன்றும் நடைமுறையிலுள்ளன. கலிங்கமாகோன் வகுத்த வன்னிமைகளும், மாகோன் வகுத்த கோயில் நிர்வாகமுறைகளுமே இன்றும் இவ்வாலயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதுடன் ஆலயத்தின் நிர்வாகிகளை வண்ணக்குமார் என அழைக்கும் பாரம்பரியமும் உண்டு.



மாகோன் வகுத்த நிர்வாக முறைகளையும், பாரம்பரிய பண்புகளையும் பேணி வருகின்ற இவ்வாலயத்தின் சுயம்புலிங்கம் பல்வேறு திருவிளையாடல்களையும் நிகழ்த்தி வருவதும் அற்புதமே. போர்த்துக்கேயர் காலத்தில் பல இந்துக்கோயில்கள் இடித்தழிக்கப்பட்டன. அவ்வகையில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் போர்த்துக்கேயரின் பார்வைக்கு உள்ளாகி தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு போர்த்துக்கீசர் வந்து பூசை செய்து கொண்டிருக்கும் குருக்களிடம் நந்தியினைப் பார்த்து இது என்னவென வினவ நந்தியென நடுக்கத்துடன் குருக்களும் கூறி நிற்க இக்கல் நந்தி புல்லுண்ணுமா என போர்த்துக்கீச தளபதி மீண்டும் கேட்டான். அதற்கு குருக்களும் என்னசெய்வதென்று அறியாது ஆம் என பதிலளித்தார். பின் இன்று பூசை முடிந்துவிட்டது. நாளை வாருங்கள் என குருக்களும் கூறி அனுப்பினார். போர்த்துக்கீச தளபதி சென்றதும் குருக்களும் இறைவனை வணங்கி நின்றார். மறுநாள் போர்த்துக்கீச தளபதி கூறிய நேரத்திற்கு கோயிலுக்குள் நுழைத்தான், குருக்களிடம் புல்லை நந்திக்கு வழங்குமாறு கூற நந்தியும் எழுந்து புல்லையுண்டு, சாணம் இட்டு சத்தமிட்டது. இதைக்கண்ட போர்த்துக்கீசனும் அவ்விடம் விட்டு ஓடினான். இவ்வாறு பல அற்புதங்கள் நிகழ்ந்த ஆலயமாக கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் போற்றப்படுகின்றது.

**படுவான் பாலகன்**

இவ்வாறு சிறப்பு பெற்று விளங்கும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய மகோற்சவமானது எதிர்வரும் 2019.09.01ம் திகதி காலை 4.30மணிக்கு திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 2019.09.15ம் திகதி மாலை 4மணிக்கு தேரோட்டமும், இரவு திருவேட்டையும் இடம்பெற்று மறுநாள் காலை (2019.09.16)ம் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவிருக்கின்றது.



# இப்படியும் ஒரு காலம் நிலவியது : கதை— 12




## மட்டக்களப்பு உணவுச் சுவை

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள் - 10)*



மட்டக்களப்பின் உணவுகள் குறித்த இந்தப் பதிவில் அதிகமாக நான் சோறு கறி சார்ந்த உணவு வகைகளையே கூறுகிறேன்.

மட்டக்களப்பிற்கேயுரிய பழங்கள், தானியங்கள், பருப்புகள், பலகாரங்கள், குடிபானங்கள் என்பன பற்றி நான் இங்கு கூறவில்லை.

மட்டக்களப்பு கடல், ஆறு, காடு, வயல் என்ற பிரதேசங்களைக்கொண்ட இயற்கை வளம் நிறைந்த பூமி.அதன் மண் தன்மை வித்தியாசமானது



ஆறுதரும் பொருட்கள் ஒரு சுவை, காடுதரும் பொருட்கள் இன்னொரு சுவை,

வயல் தரும் பொருட்கள் வேறொரு சுவை, கடல் தரும் மீன்கள் இன்னொரு சுவை.

சாப்பிட்டவுடன் சோறோடு சேர்த்து எருமைத்தயிர் அல்லது தேங்காய்ப்பாலுடன் சீனி அல்லது தேன் கலந்து வாழைப்பழமும் அதில் போட்டுப் பிசைந்து சாப்பிடுவது மட்டக்களப்பிற்கேயுரிய வழக்கம். அது தான் மட்டக்களப்பாரின் சாப்பாட்டுக்குப் பின்னாரான டெசேர்ட்.

மட்டக்களப்பின் படுவான்கரை திராய்ச்சுண்டல் மெல்லிய கசப்புச் சுவையுடையது. அதற்குள் இறால்கூனி போட்டு சுண்டுவார்கள் அது ஓர் சுவை. கல்லாற்றுக்கூனி சுண்டல் இன்னொரு சுவை.

பிஞ்சுக் கத்தரிக்காய் கொண்டு சமைக்கும் வெள்ளைக்கறிக்குள் கணையான் கருவாடு போட்டுச் சமைப்பார்கள் அது இன்னொரு சுவை, சின்னதான முட்டைக்கணவாயை மையோடு சமைப்பர் அது வேறோர் சுவை.

மட்டக்களப்பு வாவி மீன்கள் தனிச் சுவையானவை. அதில் பிடிபடும் நண்டும் இறாலும் வெகு சுவை. மட்டிச்சுண்டல் இன்னொரு ரகம். அது அந்த உப்பாற்றின் சுவை.

அங்கு பிடிபடும் மட்டுறால் பொரியல் சப்பிடுபவர் மட்டக்களப்பிலேயே தங்கி விடுவர்.

கீரை வகை அதிகம், அதில் மண்டூர்க் கீரை வெகு விசேடம். சிறுமரம்போல நீண்டு வளரும் அக்கீரைத் தண்டில் வைக்கும் ஆணம் இன்னோர் சுவை.



மரவள்ளிக்கிழங்கு ஆணம் அதற்குள் போடப்படும் மாசி அல்லது சின்ன இறாலுடன் கமகமவென மணக்கும்.



அம்மரவள்ளிக் கிழங்கில் வைக்கப்படும் பிரட்டல் கறி இன்னோர் சுவைதரும். பொன்னாங்காணி என்றொரு செடியுண்டு, அதன் ஆணம் போதும் ஒரு பிடி பிடிக்க. இவற்றை விட முல்லை, முசுட்டை, முடக்கொத்தான், குறிஞ்சா, அகத்தி, இலட்சகட்டை, பிரண்டை, முருங்கை என மூலிகை சார்ந்த செடிவகை உணவுகள் உண்டு. இவை உணவு மாத்திரமல்ல மருந்துகளும் கூட.

இவை மட்டக்களப்பில் ஏராளம். ஏராளம்...

இறாலில் ஓர் பால் ஆணம் (சொதி) வைப்பர், அதன் சுவை எங்கோ இழுத்துச் செல்லும்.



ஆற்றில் இறங்கி வலை கொண்டு இறால் வீசி, துடிக்கத் துடிக்க அதனை வெட்டி சுடச் சுட வைக்கும் இறால் ஆணம் மட்டக்ககளப்பின் அடையாளம்.

இவற்றைவிட குளத்து மீன்களான சுங்கான், உழுவை, விரால், பறட்டை, பனையான், ஏறு கெழுத்தி, ஐயாமாசி, கச்சப்பொட்டியான் என்பன சிறிய மீன்களாயினும் வெகு சுவையுடையவை.

உழுவை எனப்பெயரிய மீனில் ஓர் சுண்டல் சுண்டுவர் வெகு சுவை அது;

இவற்றை சமைப்பதற்கெனத் தனித் தனியாக பாக முறைகள் உண்டு.

எனது அம்மா இவறைச் சமைப்பதை நான் சிறுவயதில் அவதானித்துள்ளேன், அவர் காலை தொடக்கம் மத்தியானம் வரை குசினிக்குள்ளேயே இருப்பர்

சமைக்க மிகுந்த நேரம் எடுப்பார்.

நேரம் எடுத்தால்தான் கறியின் சுவை கூடும் என்பார். கறிகள் சமைக்க எப்போது தண்ணிப்பால் ஊற்றவேண்டும் தலைப்பால் எப்போது இட வேண்டும் கொச்சிக்காய்த் தூள், மிளகாய் போடுவது எப்போது? மஞ்சள் போடுவது எப்போது? தாளித்துக் கொட்டுவது எப்போது இவையெல்லாம் அவருக்கு அத்துபடி.

எனது அம்மா வைத்துத் தந்த அந்த கணவாக்கருவாடு போட்ட பிஞ்சுக்கத்தரிக்காய் வெள்ளைக் கறிபோல இது வரை நான் சாப்பிடவில்லை.

தாயோடு அறுசுவைபோம் என்ற வாக்கியத்தின் ஆழப்பொருள் அம்மாவின் இறப்பின் பின்னரே எனக்கு நன்றாக விளங்கியது.

உணவு மாத்திரமல்ல அதன் பாக முறைகளையும் கிராமத்து முதியவர்களிடமிருந்து நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.



மச்சம் மட்டக்களப்பு மக்கள் உணவில் மிகப்பிரதானமான அம்சம்.

ஆனால் கோவில் சடங்குகள் தொடங்கி விட்டால் மரக்கறி மயம்தான்.

இவற்றை விட மட்டக்களப்பில் வாழும் இஸ்லாமியரிடையே சில சுவையான உணவுகள் உள்ளன அவற்றின் சுவை அலாதியானது. கொத்துரொட்டி, சமுசா, ஆட்டுக்கால், மாட்டுக்கால், கோழிச் சூப்புகள், சுவையான கஞ்சி, ஓட்டமாவடியில் கிடைக்கும் பாலப்பம், முக்கியமாக வண்டப்பம் என அவை தனிரகமானவை.

இங்கு வாழும் பறங்கியர் சமூகத்திடையேயும் சில பாக முறைகள் உண்டு

இப்பகுதியில் வாழும் பூர்வீக குடிகளும் தமக்கெனத் தனித்துவமான உணவு முறைகள் உள்ளவர்களே.

இவை யாவும் தனியாகவும் விரிவாகவும் எழுதப்பட வேண்டியவை.

பல்லினம், பல் பாண்பாடு, பல் சுவை.

எனது குறை இத்தனை சுவைகளையும் காட்டும் வகையில் மட்டக்களப்பில் பெரும் சாப்பாட்டுக்கடைகள் இல்லையே என்பதுதான்.

இங்குள்ள நவ நாகரீகமான சாப்பாட்டுக் கடைகள் எல்லாம் ஐரோப்பிய பாணி உணவுகளையே வழங்குகின்றன.

ஐரோப்பிய பாணி உணவு எல்லா இடமும் கிடைக்கும்தானே.



# கறுத்தப் பையும் பெருத்த நினைவுகளும்..

**வேதநாயகம் தபேந்திரன்**

"காணும் போதெல்லாம் கறுத்த பாக்குடன் ( Bag ) நிற்கிறார்கள். எங்கே போகிறார்களோ தெரியவில்லை".

வடக்கு கிழக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் பிரதம செயலாளராக இருந்த கிருஸ்ணமூர்த்தி ஐயா வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வில் கேலியாகக் கூறியதே இவ் வசனம்.

அரச உத்தியோகத்தர்களின் கௌரவமான அடையாளமாகப் பார்க்கப்பட்ட இந்தப் பை தற்போது பெருமளவில் பாவனையில் இல்லையெனலாம்.

அரச உத்தியோகத்தர்களுக்கு இது ஸ்ரைலான (B)பாக்காக இல்லைப் போல இருக்கிறது. அரச சேவையில் இதனை ஆங்கிலத்தில் Circuit Bag என அதாவது சுற்றுப்பயணப் பை என்ற கருத்தில் அழைக்கின்றனர்.

எனது சிறுபராயக் காலத்தை நினைத்துப் பார்க்கிறேன். இந்தச் சுற்றுப் பயணப் பையை கொண்டு செல்லும் அரச உத்தியோகத்தர்களைப் பார்த்து ஏங்குவோம்.

நாமும் வளர்ந்து பெரிய உத்தியோகம் பார்த்து இந்தச் சுற்றுப் பயணப் பையுடன் போக வேண்டுமென மனதில் கனவு வரும்.

அக்காலத்தில் உதவி அரசாங்க அதிபர் எனப்பட்ட இந்நாளைய பிரதேச செயலாளர்களும் இந்தச் சுற்றுப் பயணப் பையுடன் மிடுக்காகப் போவார்கள்.

விதானை என நாம் இன்றும் அழைக்கும் கிராம அலுவலர்கள் சைக்கிளின் பின் கரியரில் இந்தச் சுற்றுப் பயணப் பையை வைத்துக் கட்டிக் கொண்டு வரும் போது உத்தியோகத்தை நினைத்துப் படிக்கும் என் போன்றவர்களுக்கு குறுநில மன்னர் ஒருவர் வருகின்றார், அவரைப் போலவே நாமும் ஒரு நாளில் வர வேண்டும். அல்லது ஏஜிஏ ஐயா ஜீப்பில் இந்தச் சுற்றுப் பயணப் பையுடன் போகின்றார். அது போல நாமும் போக வேண்டுமென்ற நினைப்பு வரும்.

எத்தனை உத்தியோகம் இருந்தாலும் இந்த விதானை வேலை மீது ஒரு கண் தான். ஊரில் எல்லோருக்கும் அதிகாரம் செய்யும் ஒரு ஜமீன் அல்லவா அவர்.

காலம் ஓடியது. நானும் படித்துப் பட்டம் பெற்றேன். வடக்கு கிழக்கு மாகாண சபையில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை எழுதினேன். தேர்வாகினேன்.

முதல் நியமனம் 1997 ஆம் ஆண்டு. திருகோணமலை - மட்டக்களப்பு மாவட்ட எல்லையிலுள்ள வெருகல் – ஈச்சிலம்பற்று உதவி அரசாங்க அதிபர் பணிமனைதான்.

காலை 6.30 மணிக்கு திருகோணமலை உள்துறைமுகம் சென்று பொலிஸ், நேவி பரிசோதனை முடித்து மூதூர் செல்லும் லோஞ்சில் 7.30 மணிக்கு ஏறினேன்.

லோஞ்ச் ஆடியாடி மூதூர் துறையை காலை 9 மணிக்கு அடைந்தது. அங்கு கிளிவெட்டி பஸ் எடுத்து மாவிலாறின் கிளை ஆற்றை பாதையில் கடந்தேன்.

அடுத்த கரையான தங்க நகர் சென்று கூட வந்து விதானைமாரின் சைக்கிளில் ஏறி அலிஒலுவ சென்று அங்கிருந்து மகிந்தபுர சென்றேன்.

கூட வந்த விதானைப் பெடியள் இந்த சுற்றுப் பயணப் பையை வைத்திருந்தமையால் அவர்கள் புண்ணியத்தில் எனக்கு பெரிதாக கெடுபிடி இல்லை.

இந்தக் கறுத்தப் பையைத் திறந்து பார்க்காமலே இராணுவ வீரர்கள் பயணம் செய்ய அனுமதித்தார்கள். அரச பணியாளர்கள் அரசாங்கத்திற்கு



விரோதமான செயல்களில் ஈடுபட மாட்டார்கள் என்ற உச்ச நம்பிக்கை.

யாழ்ப்பாண முகவரி உள்ள தேசிய அடையாள அட்டை வைத்திருந்த என்னை சாடை மாடையாக விசாரித்தார்கள்.

திங்கள் வேலைக்குச் சென்ற நான் திரும்பி வெள்ளிக்கிழமையே வந்தேன்.

விதானைப் பெடியள் சுற்றுப் பயணப் பையை வைத்திருந்ததனால் ஆமிக்காரர் வழியில் அவர்களுக்கு மரியாதை.

ஆகவே எனக்கும் ஒரு சுற்றுப் பயணப் பை தேவையென நினைத்தேன். எனது திணைக்கள உத்தியோகத்தர்களிடம் கேட்டேன்.

அவர்கள் கடிதமொன்று எழுதித் தாருங்கள். புதிதாக நியமனம் பெற்ற 29 பேருக்கும் வாங்கித் தருகிறோமென்றார்கள்.

எழுதிக் கொடுத்து விட்டேன். எத்தனை மாதம் ஆகுமோ?

ஆனாலும் மனம் கேட்கவில்லை. சுற்றுப் பயணப் பையுடன் திங்கட்கிழமை நானும் ஆமிக்காரர் முன்பாக லெவலாகப் போக வேண்டுமேயென மனம் ஆதங்கப்பட்டது.

எனக்குத் தெரிந்த அமைச்சு உத்தியோகத்தர் ஒருவரிடம் விசயத்தைக் கூறினேன்.

அவர் தனக்குத் தெரிந்த மட்டக்களப்பைச் சேர்ந்த களஞ்சியக் காப்பாளரிடம் விசயத்தைக் கூறினார். பெருந்தன்மையான மனிதர் அவர்.

பாவித்துக் கையளிக்கப்பட்டுத் தனது பொறுப்பிலிருந்த சுற்றுப் பயணப் பை ஒன்றைத் தந்தார்.

அன்று ஒரு சனிக்கிழமை. நானும் உடனேயே எனது கனவுப் பொருள் கைகூடி விட்டதென பேரானந்தப்பட்டேன்.

உடனேயே சுற்றுப் பயணப் பையை நன்றாகத் துடைத்து சப்பாத்து பொலிஸ் செய்யும் பொருள்களால் அதனைப் பொலிஸ் செய்தேன்.

திங்கட்கிழமை பொலிசிடமும் நேவியிடமும் காட்டும் போது லெவலாக இருக்க வேண்டுமல்லவா?

அதனால் பொலிசிங்கை லெவலாகப் பொலிஸ் செய்தேன்.

பொலிஸ் செய்த சுற்றுப் பயணப் பையை கதிரை ஒன்று வைத்து வெய்யிலில் காய வைத்தேன். அடிக்கடி அதனை அழகு பார்த்தேன்.

எ ப் ப ய டா திங்கட்கிழமை வி டி யு மெ ன் று மண்வாசனை படத்தில் வரும் ரேவதி காத்திருந்தது போலக் காத்திருந்தேன். ஆனால் ஒரு சிறு வித்தியாசம் ரேவதி நடுச்சாமம் தாண்டியவுடன் சேவலுக்குக் கல் எறிந்து கூவப் பண்ணி விடிந்து விட்டது என்பார்.

அது போல நான் செய்யவில்லை.

ஏனென்றால் திருகோணமலை நகரின் நெருக்கடி மிக்க வீடுகளில் யாருமே சேவல் வளர்க்கவில்லை.

திங்கட்கிழமை வந்தது. அதிகாலை 5 மணிக்கே நித்திரை விட்டெழுந்தேன். எனது கனவு நாயகன் சுற்றுப் பயணப் பையைப் பலமுறை அழகு பார்த்துக் கொண்டு கையில் எடுத்துக் கொண்டேன்.

அதனுள் எனது உடுப்புகள், பைல், சில பேனைகள். அதனைத் தூக்கிக் கொண்டு ஒரு லெவல் நடை நடந்தேன்.

திருமால் வீதியிலிருந்து கடற்காட்சி வீதி சென்று உள்துறைமுக வீதிக்குச் சென்றேன்.

உள்துறைமுக வாசல் பொலிசிடமும், நேவியிடமும் பரிசோதனைக்காக அதனைக் காட்டிய போது எனக்குள் ஓர் உணர்வு. அது பெருமிதமா? கர்வமா? உத்தியோகத்தர் என்ற மிடுக்கா?

எனக்கே தெரியாத ஓர் உணர்வு. மூதூர் லோஞ்ச் ஏறிப் போய் விட்டேன்.

ஜலீல் கடையில் காலைச் சாப்பாடு. 5 இடியப்பம், சொதி, சம்பலுடன் சாப்பிட்டால் இருபது ரூபா. ஆறு இடியப்பம் எடுத்தால் 40 ரூபா. இது ஜலீலின் புதுக் கணக்கு.ஜலீல் மின்சார சபையில் மீற்றர் வாசிப்பவராக இருந்தாரோ? தெரியவில்லை. 90 யூனிற் தாண்டியவுடன் கட்டணம் எகிறிப் பாயும். அது போலத் தான் ஜலீலின் சாப்பாட்டுக் கணக்கும்.கிளிவெட்டி செல்லும் பஸ்சில் ஏறியாகி விட்டது. கிடங்கு மடங்கான வீதியில் பென்சன் எடுக்கும் வயதிலுள்ள பஸ் ஆடியாடி ஓடியது.

நான்கு இடத்தில் இறங்க வேண்டும். நான் சுற்றுப் பயணப் பை வைத்திருக்கிறேன் தானே என நினைத்துச் சோதனைச் சாவடிகளில் இறங்கவில்லை.

பஸ்ஸை சோதனையிட வந்த ஆமிக்காரன் கிராம அலுவலரான விதானைமரை பஸ் சீற்றில் இருக்க வைத்து விட்டு என் போன்றோரை இறங்கச் சொன்னான்.

நான் சமாஜசேவா நிலதாரி ( சமூக சேவைகள் உத்தியோகத்தர் ) என எனக்குத் தெரிந்த ஒரேயொரு சிங்களச் சொல்லைச் சொன்னேன்.

இராணுவ வீரனோ ஏதெதோ சிங்களத்தில் சொல்லி விதானைமார் தான் பெரிய உத்தியோகம். நீங்கள் எல்லோரும் சின்ன உத்தியோகமெனச் சொன்னதாக பொதுமகன் ஒருவன் எனக்கு மொழி பெயர்ப்புத் தந்தான்.

என்ன செய்வது ஐந்தாம், ஆறாம் வகுப்பு வரை படித்த ஏழைச் சிங்களக் குடும்பத்திலிருந்து வந்த ஆமிக்காரனுக்கு விதானை தான் உலகத்தில் பெரிய உத்தியோகமாகத் தெரிந்தது.

அது அவனது பிழையல்ல.

என்னை இறக்கி நடக்கச் செய்தபோது இந்தக் கறுத்தப்பை மீது கோபமாகவே வந்தது.

லீவு படிவம் கொடுத்து ஆமியை வசியம் செய்யும் முறையைப் பின்னாளில் கற்றுக் கொண்டேன். திருகோணமலைக் கச்சேரியில் எனது நண்பர்களிடம் 25 லீவு ( விடுமுறை ) படிவம் பெற்றுக் கொள்வேன். கிளிவெட்டி, அலிஒலுவ, மகிந்தபுர போன்ற இடங்களில் நிற்கும் இராணுவ வீரர்கள் கேட்டால் தலா 2 படிவமே கொடுப்பேன்.

என்னுடன் நிழலாக வரும் மட்டக்களப்பு தன்னாமுனையைச் சேர்ந்த தேவசகாயம் அண்ணை கேட்பார் "என்ன எஸ்எஸ்சோ (SSO) 25 போம் வைத்துக் கொண்டு ஆமிக்கு இரண்டிரண்டு போம் தானே கொடுக்கிறீர்கள்"

"அண்ணை தேவையான அளவு போம் கொடுத்தால் பிஸ்னஸ் முடிந்து விடும். பிறகு எங்களைக் கணக்கு எடுக்க மாட்டான்" என்றேன்.

நீங்கள் ஆள் விசயகாரன் தான் என்றார். அப்போது மகிந்தபுர முதல் மட்டக்களப்பு வாழைச்சேனை உசேன் ஏத்தம் வரையான பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருந்தது.

ஒரு முறை ஈச்சிலம்பற்றிலிருந்து சொந்த தேவை கருதி மட்டக்களப்புக்குச் செல்ல வேண்டி வந்தது. அப்போது வெருகல்துறைக்குச் சென்றேன்.

அங்கிருந்து மட்டக்களப்பு செல்லும் பஸ் ஏறினேன்.வாழைச்சேனை உசேன் ஏத்தத்தில் பெரிய இராணுவ முகாம். பஸ்ஸையும், ஆள்களையும் சோதனை செய்ய ஒரு மணித்தியாலம் பிடித்தது.

அப்போது சுற்றுப் பயணப் பை என்ற எனது கறுத்தப் பையைச் சோதனை செய்த இராணுவ வீரன் மிகுந்த மரியாதை செய்தான்.

இந்தக் கறுத்தப் பை எமது உத்தியோகத்தர்களின் வாழ்வியலுடன் குறிப்பாகப் போர்க்கால வாழ்வுடன் இரண்டறக் கலந்த ஒரு உறவு.

ஆனால் இந்தச் சுற்றுப் பயணப் பையைப் பாவிப்போர் இல்லையென்று சொல்லுமளவுக்கு நிலைமை தற்போது வந்து விட்டது. எமது ஞாபகங்களின் நாட்குறிப்பில் மட்டுமே வாழும் ஒன்றாகி விட்டது இது இப்போது.

# கற்போம்

## விஞ்ஞானம்

குணம் சவரிராஜா

X - இணைந்த பரம்பரை அலகுகளின் தலைமுறையுரிமை (inheritance of X – linked inheritance)
இலிங்கம் - இணைந்த இயல்புகளின் அல்லது பரம்பரை அலகுகளின் தலைமுறையுரிமை, பெண்ணின் XX பிறப்புரிமையமைப்பு மற்றும் ஆணின் XY பிறப்புரிமையமைப்பு காரணமாக ஆணிலும் பெண்ணிலும் வேறுபடுகின்றது. கருக்கட்டலின்போது, தமது உயிரியலுக்குரிய இருபெற்றோர்களிலும் இருந்து வரும் X நிறமூர்த்தங்கள் ஒரு பெண் நுகத்தைத் தோற்றுவிக்கின்றன. மறுகையில் பெண் பெற்றாரிடமிருந்து வரும் X நிறமூர்த்தமும் ஆண் பெற்றாரிடமிருந்து வரும் Y நிறமூர்த்தமும் ஒரு ஆண் நுகத்தைத் தோற்றுவிக்கின்றன. இவ்வாறு பெண்களில் அவர்களின் சமநுகத்துக்குரிய பிறப்புரிமையமைப்புக்களில் மாத்திரமே X - இணைந்த பின்னிடைவான ஒழுங்கீனங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. எனினும் ஆண்களில், ஒரு X நிறமூர்தமே உள்ளதால் அவர்கள் ஒரு பின்னிடைவான X - இணைந்த எதிருருவை மாத்திரமே கொண்டிருப்பார். ஆகவே, ஒரு பின்னிடைவான X - இணைந்த எதிருருவைக் கொண்டிருந்தாலே அது ஒழுங்கீனம் வெளிப்படுத்தப்படுவதற்குப் போதுமானதாக உள்ளது.

பல்திருப்பவுண்மை (pleiotrophy)
சில சந்தர்ப்பங்களில் தனித் ஒரு பரம்பரை அலகின் வெளிப்பாடு ஒன்றுடன் ஒன்று சார்பற்ற கல இயல்புகளின் வெளிப்பாடுகளைப் பாதிக்கின்றது. மேலே குறிப்பிட்ட இந்தத் தோற்றப்பாடு பல்திருப்பவுண்மை என அழைக்கப்படுகின்றது. பல்திருப்பவுண்மைக்குரிய எதிருருக்கள் மனிதரில் தோன்றும் Cysticfibrosis மற்றும் அரிவாள் போலியுருக் குருதிச்சோகை (sickle-cell anaemia) போன்ற பல்குணங்குறியளுடன் தொடர்பான பல பாரம்பரிய நோய்களுக்குக் காரணமாக உள்ளது.

அரிவாளுரு – கலநோய் / அரிவாளுருக்குருதிச்சோகை (Sickle –cell disease)
அரிவாளுரு – கலநோயானது செங்குழியங்களின் ஈமோகுளோபின் புரதத்தில் தோன்றும் ஒரு மாற்றத்தின் விளைவாக ஏற்படுகின்றது. மேற் குறிப்பிட்ட நிலைமைக்கு தனியானதொரு பரம்பரையலகு விகாரமே காரணமாகும். சமநுகமுடைய பின்னிடைவான நபர்களில், அனைத்து ஈமோக்குளோபின்களும் அரிவாளுரு – கல வகையைக் கொண்டனவாக இருக்கும். உயரமான பிரதேசங்களில் வசிக்கும் அல்லது பௌதீக ரீதியிலான அழுத்தத்தை அனுபவிக்கும் மக்கள் தமது குருதியில் குறைவாக ஒட்சிசன் உள்ளடக்கத்தைக் கொண்டு காணப்படுவர். குருதியிலுள்ள குறைவாக ஒட்சிசன் உள்ளடக்கமானது அரிவாளுரு – கல ஈமோகுளோபின் புரதத்தைத் தூண்டி, அதனை சேர்க்கையடையச் செய்து செங்குழியங்களில் அரிவாள் உருவான வடிவத்தைத் தோற்றுவிக்கிறது. அரிவாளுருக் கலங்கள் ஒருங்கொட்டுதலை மேற்கொண்டு சிறிய குருதிக்கலன்களை அடைத்து, உடலின் பல பகுதிகளில் இழையம் மற்றும் அங்கங்களில் சேதத்தை விளைவிக்கலாம். இதனால் சிறுநீரகச் செயலிழத்தல், இதயச் செயலிழப்பு மற்றும் துரோம்போசிஸ் போன்றவற்றை ஏற்படுத்தலாம்.

Cystic fibrosis
Cystic fibrosis என்பது பொதுவான தன்மையிலும் பார்க்கத் தடிப்பானதும் ஒட்டுந்தன்மையுடையதுமான சீதத்தைத் தோற்றுவிக்கும் நோய்க்குரிய நிலைமையாகும். இதன் பெறுபேறாக, சுவாசப்பைத் தொற்றுகள், சுவாசத்தொழிற்பாடு தவறுதல், குறை சமிபாடு மற்றும் மலட்டுத்தன்மை ஆகியவற்றை விளைவிக்கக்கூடிய சதையி, சுவாசப்பைகள், உணவுச்சுவடு மற்றும் இனப்பெருக்க அங்கிகளில் சீதம் தேக்கமடைகின்றது. முதலுருமென்சவ்வின் குறைபாடுடைய குளோரைட்டுக் கால்வாயின் மேலதிக குளோரின் சுரத்தலே சீதம் தடிப்படைதலுக்குக் காரணமாகும். Cystic fibrosis கடத்து – மென்சவ்வுச் சீராக்கிப் புரதமான CFTR புரதத்தில் ஏற்படும் மாற்றத்தின் பெறுபேறாகவே கடத்து – மென்சவ்வின் குளோரைட்டுக் கால்வாயில் குறைபாடு ஏற்படுகிறது. CFTR பரம்பரை விகாரமே CFTR புரதம் மாற்றமடைவதற்குக் காரணமாகும். இது தன்நிறமூர்த்தத்திற்குரிய பின்னிடைவான ஒழுங்கீனம் என அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதிசனனவியல் (Epigenetics)
DNA தொடரொழுங்கு அல்லது பிறப்புரிமையியலுக்குரிய சைகை அல்லாத பிற காரணிகளால் கட்டுப்படுத்தப்படும் குறிப்பிட்ட இயல்புகளின் குறிப்பிட்ட தோற்றவமைப்புக்கள் தோன்றுதலைக் கற்றல் அதிசனனவியல் என அழைக்கப்படும். மெதைலேற்றம் அல்லது மெதைலிறக்கம் மூலம் ஒரு DNA யினது நியூக்கிளியோடைட்டுக்களின் தொடரொழுங்கை மாற்றியமைப்பதன் மூலம் சில பரம்பரையலகுகளைத் தொழிற்படத் தூண்டுதல் (switching on) அல்லது தொழிற்பாட்டை நிறுத்துதல் (swiching off) இதற்குரிய கராணமாக உள்ளது. இதன்போது மெதையில் கூட்டங்கள் வான்வகை DNA தொடரெழுங்குக்குச் சேர்க்கப்படுகின்றன. அல்லது ஒரு மெதையிலேற்றமடைந்த DNA தொடரொழுங்கில் இருந்து அகற்றப்படுகின்றன. எழுந்தமானமாக நிகழும் மேற்குறித்த சந்தர்ப்பங்களின் பெறுபேறாக ஒரு தனித்த DNA தொடரொழுங்குக்கு வேறுபட்ட மாற்றமடைந்த வெளிப்பாடு தோன்றுகின்றது.

பெற்றோரிலிருந்து தலைமுறையுரிமையாகப் பெற்ற சமிக்ஞைகள் அல்லது சூழற்காரணிகள் காரணமாகத் தோன்றும் சமிக்ஞைகளின் பெறுபேறாக அதிசனனவியல் தோன்றுகின்றது. பெற்றோரில் இருந்து பிள்ளைகளுக்கு அதிசனனவியல்புக்குரிய இயல்புகள்

தொடர்ச்சி... (பக்கம் -14)

## கணிதம்

திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட் / மமே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்.

### பின்னங்களைச் சுருக்கி எளிய வடிவில் தருதல்

பகுதி எண்கள் சமனற்றதாவுள்ள பின்னங்களைக் கூட்டவோ கழிக்கவோ செய்யும் போது பகுதி எண்களைச் சமவலுப் பின்னத்தைப் பயன்படுத்திச் சமப்படுத்திய பின்னர் கூட்டவோ கழிக்கவோ செய்யலாம். இதைப் பார்ப்போம்.

(1) $\frac{1}{2}+\frac{1}{4}$ [இங்கு பகுதி எண்கள் 2, 4 ஆகும். எனவே 2ஐ 4 ஆக மாற்ற வேண்டும். அதற்கு $\frac{1}{2}$ என்பதிலுள்ள பகுதி எண்ணையும் தொகுதி எண்ணையும் 2ஆல் பெருக்க வேண்டும்.]

$=\frac{2 \times 1}{2 \times 2}+\frac{1}{4}$

$=\frac{2}{4}+\frac{1}{4}$

$=\frac{3}{4}$

(2) $\frac{2}{3}-\frac{1}{6}$ [இங்கு பகுதி எண்கள் 3, 6 ஆகும். எனவே 3ஐ 6 ஆக மாற்ற வேண்டும். அதற்கு $\frac{2}{3}$ என்பதிலுள்ள பகுதி எண்ணையும் தொகுதி எண்ணையும் 2ஆல் பெருக்க வேண்டும்.]

$=\frac{2 \times 2}{3 \times 2}-\frac{1}{6}$

$=\frac{4}{6}-\frac{1}{6}$

$=\frac{3}{6}$

$=\frac{3 \div 3}{6 \div 3}$ [பகுதி, தொகுதி எண்களை ஒரே இலக்கத்தால் வகுக்க முடியும் எனின் அதைக் கட்டாயம் வகுத்தே கொடுக்க வேண்டும்.]

$=\frac{1}{2}$

(4) $\frac{1}{3}+\frac{1}{2}$ [இங்கு பகுதி எண்கள் 3, 2 ஆகும். இவற்றை முன்பு காட்டியது போல் பெருக்க முடியாது. பொ.ம.சி காண வேண்டும். இவ்விரண்டினதும் பொ.ம.சி 6 ஆகும். இந்த இரண்டு பின்னங்களினதும் பகுதி எண்களைச் சமவலுப் பின்னம் மூலம் 6ஆக மாற்ற வேண்டும்.]

$=\frac{1 \times 2}{3 \times 2}+\frac{1 \times 3}{2 \times 3}$

$=\frac{2}{6}+\frac{3}{6}$

$=\frac{5}{6}$

(5) $\frac{2}{3}-\frac{1}{4}$ [இங்கு பகுதி எண்கள் 3, 4 ஆகும். பொ.ம.சி காண வேண்டும். இவ்விரண்டினதும் பொ.ம.சி 12 ஆகும். இந்த இரண்டு பின்னங்களினதும் பகுதி எண்களைச் சமவலுப் பின்னம் மூலம் 12ஆக மாற்ற வேண்டும்.]

$=\frac{2 \times 4}{3 \times 4}-\frac{1 \times 3}{4 \times 3}$

$=\frac{8}{12}-\frac{3}{12}$

$=\frac{5}{12}$

❖ பின்வரும் பின்னங்களைச் சுருக்கி எளிய வடிவில் தருக.

(1) $\frac{2}{9}+\frac{5}{9}$ (2) $\frac{1}{6}+\frac{5}{12}$ (3) $\frac{2}{5}+\frac{1}{4}$

(4) $\frac{5}{8}-\frac{4}{8}$ (5) $\frac{2}{7}-\frac{1}{14}$ (6) $\frac{2}{4}-\frac{1}{7}$

பக்க அனுசரணை

IN LUMINE TUO LUMEN

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி
பழைய மாணவர்கள் சங்கம்
பிரித்தானியா.

# கற்போம்

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 49

### க.பொ.த. (சா/த) – தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

தமிழ்மொழியும் இலக்கியமும் I இல் உவமைத் தொடர்கள் தொடர்பாக ஒரு வினா வருவதுண்டு. அது தொடர்பாகக் கவனம் செலுத்துவோம்.

புதிய பாடத்திட்டத்துக்கமைவாகத் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்துக்கான முதலாவது பரீட்சை 2016இல் நடைபெற்றது. நாம் 2016இல், 2017இல், 2018இல் நடைபெற்ற பரீட்சைகளுக்குரிய வினாத்தாள்களில், அருஞ்சொற்றொடர்கள் தொடர்பாக வந்த வினாக்களை எடுத்துக்காட்டுக்காக இங்கே பார்ப்போம்.

2016

18. 'வாழையடி வாழையாக' என்ற அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது
    (1) நன்றியுணர்வு (2) மாற்றமின்மை
    (3) பாரம்பரியத் தொடர்ச்சி (4) உபகாரத் தன்மை

2017

18. செழிப்போடு அழிவின்றி வாழ ஒருவரை வாழ்த்துவதற்குப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்
    (1) ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி (2) கண்ணுக்குக் கண்ணாக
    (3) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் (4) வைத்தகண் வாங்காமல் பார்த்துப் பார்த்து

2018

17. பெற்றோர் தம் மகனைக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தனர். இங்கு 'கண்ணுக்குக் கண்ணாக' என்ற அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது
    (1) நெருக்கமாக இருத்தல் (2) கவனமாகப் பார்த்தல்
    (3) உறக்கமின்றி வளர்த்தல் (4) நேரடியாக நோக்குதல்

□ இங்கு வந்த வினாக்களைக் கவனியுங்கள்.

(1) அருஞ்சொற்றொடர் தரப்பட்டு, அந்த அருஞ்சொற்றொடர் உணர்த்தும் கருத்தை இனங்காணுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(2) அருஞ்சொற்றொடரின் கருத்துத் தரப்பட்டு, அந்தக் கருத்தை உணர்த்தும் அருஞ்சொற்றொடரை இனங்காணுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3) ஓர் அருஞ்சொற்றொடருக்கு ஒத்த இன்னொரு அருஞ்சொற்றொடரை இனங்காணும் ஆற்றலையும் பெற்றிருப்பது நல்லது.

01. 'ஓடுஞ் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்' என்னும் அருஞ்சொற்றொடர் குறிப்பது
    (1) யாவும் ஒன்றுதான் (2) ஏற்றத்தாழ்வு அற்ற தன்மை
    (3) பற்று அற்ற தன்மை (4) பொன் விலைகூடியது

02. 'துள்ளித் திரியும் காலம்' என்னும் அருஞ்சொற்றொடர் குறிப்பது
    (1) அசட்டுத் தைரியம் (2) இளமைப் பருவம்
    (3) பொறுப்பற்ற தன்மை (4) மூத்தோர் சொல்கேள் பருவம்

03. 'நடை தளர்ந்து நாத் தடுமாறி' என்னும் அருஞ்சொற்றொடர் குறிப்பது
    (1) முதுமைப் பருவம் (2) நோயின் தன்மை
    (3) வசதி அற்ற தன்மை (4) அழுந்தும் காலம்

04. 'கருவிலே திருவுடையோன்'; என்னும் அருஞ்சொற்றொடர் குறித்து நிற்பது
    (1) சிறு வயதிலேயே அழகு மிகுந்தவனாக இருத்தல்
    (2) இறைவனின் அருளைச் சிறுவயதிலேயே பெற்றிருத்தல்
    (3) பிறப்பிலேயே பெருமையைக் கொண்டவனாக இருத்தல்
    (4) செல்வத்தையும் அழகையும் உடையவனாக இருத்தல்

05. நாம் விரும்பிய ஒருவரின் வருகையை மிகவும் எதிர்பார்த்து நிற்பதைக் குறிக்கும் அருஞ்சொற்றொடர்
    (1) அகமும் முகமும் மலர்ந்து (2) கால் கடுக்க
    (3) ஊண் உறக்கமின்றி (4) வழிமேல் விழிவைத்து

06. பிறருக்காக வாழ்வதைக் கொள்கையாகக் கொண்டிருப்போரைக் குறிக்கும் அருஞ்சொற்றொடர்
    (1) தமக்கென வாழாத் தகைமையுடையோர் (2) ஈத்துவக்கும் இன்பம்
    (3) ஆண்டி முதல் அரசன் வரை (4) குறுகுறு நடந்து சிறுகை நீட்டி

07. ஒரு விடயத்தை முழுமன நிறைவோடு செய்தல் என்பதைக் குறிக்கும் அருஞ்சொற்றொடர்
    (1) ஆசைகாட்டி மோசம்செய்து (2) அகமும் முகமும் மலர்ந்து
    (3) கூடிக் குலாவி (4) இடம் பொருள் ஏவல்

08. மற்றவர்க்குக் கொடுத்து வாழ்வதால் கிடைக்கும் மகிழ்ச்சியைக் குறிக்கும் அருஞ்சொற்றொடர்
    (1) இகபர இன்பம் (2) அகமும் முகமும் மலர்ந்து
    (3) கூடிக் குலாவி (4) ஈத்துவக்கும் இன்பம்

தொடர்ச்சி...

## விஞ்ஞானம்

தலைமுறையுரிமையடைதல் அதிசனனவியல்புக்குரிய இயல்புகள் தலைமுறையுரிமை என அழைக்கப்படும் இது, சூழலில் இருந்து வரும் பல்வேறுபட்ட புறத்தூண்டல்களினால் எதிர்நிலையடையப்படலாம். அதிசனனிக்குரிய சில தாக்கங்களின் பெறுபேறாக, புற்றுநோய்களுக்கு இட்டுச்செல்லும் பொருத்தமற்ற பரம்பரையலகு வெளிப்பாடுகள் தோன்றுகின்றன.

Schlzophrenia என்பது பிறப்புரிமையியல்புக்குரிய குறைபாடு காரணமாகத் தோன்றும் மனோரீதியான ஓர் ஒழுங்கீனம் ஆகும். ஒத்த இரட்டையரில் ஒருவர் மட்டும் Schizophrenia நோய்க்கு உள்ளாகும்போது மற்றையவர் அதற்கு உள்ளாகாமல் இருப்பார் அதிசனனவியல் எனப்படும், சில DNA தொடரொழுங்கு இரண்டு வகையான வெளிப்பாடுகள் தோன்றுவதனாலேயே இது ஏற்படுகின்றது.

குடித்தொகைப் பிறப்புரிமையியல் (population genetics)

ஹாடி – வைன்டபேர்க் சமநிலை (Hardy – Weinberg Equilibrium)

ஒரு குறிப்பிட்ட இயல்புக்குரிய / பிறப்புரிமையியல்புக்குரிய தானத்திற்குச் சார்பாக ஒரு குடித்தொகை கூர்ப்படைந்து கொண்டிருக்கின்றதா என்பதை மதிப்பீடு செய்வதற்கு ஹாடி-வைன்பேர்க் சமநிலை பயன்படுத்தப்படுகின்றது. ஒரு குடித்தொகையிலுள்ள ஒரு இயல்பின் பிறப்புரிமையமைக்குரிய கட்டமைப்பு அந்த பிறப்புரிமையமைப்பிற்குரிய தானத்தில் கூர்ப்படைந்து கொண்டிருக்காவிடில், அது மாற்றமடையாமல் தங்கிவிடுகின்றது. ஆகவே ஒரு குடித்தொகையின் ஒரு இயல்புக்கான எதிர்வுகூறப்பட்ட தரவு, அதே குடித்தொகையில் இருந்து பெறப்பட்ட உண்மையான தரவுடன் ஒப்பிடப்படலாம் மேலே கூறப்பட்ட இரு தரவுகளினதும் ஒப்பீடு, கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இயல்பு சார்பாக கூர்ப்படைகின்றதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவலாம்.

ஹாடி-வைன்பேர்க் சமநிலைத் தத்துவம் (Hardy – Weinberg Euilibrium principle)

1908 ஆம் ஆண்டு பிரித்தானிய கணிதவியலாளரான G.H.Hardy மற்றும் ஜேர்மனிய வைத்திய நிபுணரான W.Weinberg ஆகிய இருவரும், கூர்ப்படையாமல் இருக்கும் ஒரு குடித்தொகையில், எதிருரு மற்றும் பிறப்புரிமையமைப்பு மீடிறன்கள் பரம்பரையிலிருந்து பரம்பரைக்கு மாறிலியாக அமைந்து காணப்படும் எனத் தனித்தனியாகக் காண்பித்தனர். இது இப்பொழுது குடித்தொகைப் பிறப்புரிமையியலில் ஹாடி-வைன்பேர்க் தத்துவம் எனப்படும் ஒரு முக்கியமான எண்ணக்கருவாகக் கருதப்படுகின்றது.

எதிருரு மற்றும் பிறப்புரிமையமைப்பு மீடிறன்கள் அடுத்தடுத்துத் தொடரும் சந்திகளில் மாற்றமடைந்துள்ளனவா என்பதைத் தீர்மானிப்பதற்கு, குடித்தொகை ஒன்றில் நிகழக்கூடிய சாத்தியமான எல்லா இனங்கலத்தல்களிலும் காணப்படக்கூடிய எதிருருக்களைக் கவனத்திற்கொண்டு ஓர் புன்னற் சதுரம் வரையப்படலாம்.

ஹாடி-வைன்பேர்க் சமநிலையைத் தீர்மானிப்பதற்கு பின்வரும் உதாரணம் பயன்படத்தப்படலாம்.

பூவின் நிறத்திற்கான எதிருருக்களுக்கு நிறைவில் ஆட்சியைக் காண்பிக்கும் ஒரு வான்வகைப் பூக்குந் தாவரக்குடித்தொகை, அவற்றின் பிறப்புரிமையமைப்புக்களைக் காண்பிக்கும் தெளிவான தோற்றவமைப்புக்களை உடையது.

அதாவது,

CR எதிருருவுக்கான சமநுகமுடைய (CRCR) தாவரங்கள் சிவப்பு நிறப்பொருளை உற்பத்திபண்ணி சிவப்பு நிறப்பூக்களை உண்டாக்குகின்றன. CW எதிருருவுக்கு சமநுகமுடைய (CWCW) தாவரங்கள் வெண்ணிறப்பூக்களை உண்டாக்குகின்றன. இதரநுகமுடைய தாவரங்கள் (CRCW சொற்பளவு சிவப்பு நிறப்பொருளை உற்பத்திபண்ணி இளஞ்சிவப்பு பூக்களை உண்டாக்குகின்றன.

500 பூக்களின் குடித்தொகையில் 800 CR எதிருருக்களும் 200 CW எதிருருக்களும் இருந்தன. மேற்கூறப்பட்ட தாவரத்தினது பூவின் நிறமானது ஒரு சோடி நிறவுருக்களால் தீர்மானிக்கப்படுவதால், அவற்றினது அல்லிகளின் நிறப்பொருளாக்கத்துக்கு 500 பூக்களும் 1000 எதிருருக்களைக் கொண்டு காணப்படலாம்.

ஆகவே,

CR எதிருருக்களின் எதிருரு மீடிறன் (P)=800/1000=0.8

CW எதிருருக்களின் எதிருரு மீடிறன் (q)=200/1000=0.2

புணரிகள் எழுந்தமானமாகத் தோற்றுவிக்கப்பட்டால், ஒரு முட்டை அல்லது விந்து CR ஐ அல்லது CW வைக் கொண்டிருக்கும் நிகழ்தகவானது, குடித்தொகையில் இந்த எதிருரு ஒவ்வொன்றுக்குமான மீடிறனுக்குச் சமமாக இருக்கும். இவ்வாறு, ஒவ்வொரு முட்டையும் ஒரு CR எதிருருவைக் கொண்டிருக்கும் வாய்ப்பு 80% அகவும், ஒரு CW எதிருருவைக் கொண்டிருக்கும் வாய்ப்பு 20% ஆகவும் உள்ளது. ஒவ்வொரு விந்தும் இதனையே கொண்டிருக்கும் வாய்ப்பு உள்ளது. எழுந்தமானமான கருக்கட்டலின்போது, புணரிகள் எழுந்தமானமுள்ள முறையில் சேர்க்கையடைகின்றன. ஆகவே ஒவ்வொரு பிறப்புரிமைக்குரிய சேர்க்கையின் நிகழ்தகவைக் கணிப்பதற்கு பெருக்கல் விதி பிரயோகிக்கப்படலாம்.

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## இமாலய சாதனை...

கொள்ள வேண்டும்.

அந்நாட்டில் வளையல்கள் அணியும் வனிதையர்கள். தாம் பிறந்த தாய்நாட்டை அடிமைப்படுத்த போர்ப்படை நடத்தி வந்த எதிரிகள் மீது வாளெடுத்து போர் தொடுத்த வீரச் செயல்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்நாட்டில் அந்நியன் அரசு ஏற்படுவதனால் அது எங்கள் உயிரற்ற உடம்புகளின் மீது தான் ஏற்படவேண்டுமென்று வீர உரைபகர்ந்து வெற்றி அல்லது வீரமரணமென்று போரிட்ட வீரர்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்நாட்டில் காதலுக்கும் கற்புக்கும் நிலைக்களமாய் வாழ்ந்த பெண்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்நாட்டு நாகரீகத்தில் வாழ்க்கைக்கு உகந்த வழிகள் அமைத்து சீரும் சிறப்பும் ஆக வாழ்ந்த பெருவாழ்வை அறிந்து கொள்ள வேண்டும். அவற்றை எல்லாம் தெரிந்து கொள்ளாது வாழ்வது வாழ்வாகாது. நாமும் இங்கு தமிழரென்று சொல்லிக் கொண்டு வாழ்வதிலும் நஞ்சைத் தின்று சாவது சாலச்சிறந்தது.

பாமரராய் விலங்குகளாய்
உலகனைத்தும் இகழ்ச்சி
சொல்லப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடல் நன்றோ சொல்லீர்

என்று பாரதியார் தமிழரென்ற உணர்ச்சியின்றி வாழ்வோரைப் பார்த்து கேட்கும் கேள்விதனை நாமாவது மாற்ற முயல வேண்டும். அல்லது மாற்றும் பணியை ஆரம்பித்து வைத்தால் எதிர்காலம் அப்பாதையிலே சென்று வெற்றிப் பட்டியலை கையளிக்கும் என்று உறுதி கொள்வோம். இதைவிட்டு எதற்கெடுத்தாலும் வெளிநாட்டைப்பற்றிப் பேசுவதும், புகழ்வதும் நம்மில் பலரிடையே நிலவும் பெருங்குறை.

இலக்கியமா நாகரீகமா நாவலா நடையுடை பாவனைகளை அடக்கிய பழக்க வழக்கங்களா வாழ்க்கைக்கு உகந்த வசதிகளா இப்படி எதற்கெடுத்தாலும் நாம் அந்நிய நாடுகளையே போற்றிப் புகழும் நிலையில் இருக்கிறோம். நம்மிடம் எதுவும் இல்லையென்று முடிவுசெய்து விடுகிறோம்.

வெட்கமும் வேதனையும் அளிக்கும் இந்நிலையில் பெருமிதமும் மகிழ்வும் அடைகிறோம். இக்குறைபாட்டால் ஏற்பட்ட கேடுகள் ஒன்றிரண்டல்ல பற்பல பெற்றதாய் அழகற்றவள் அல்லது விழியற்றவள் அல்லது நகையற்றவள் என்ற காரணத்திற்காக நாம் பிறிதொருதாயின் பாலைக்குடித்து வளரத் துணிவோமா அல்லது இளமை முறுக்கோடு நாம் இருக்கும் சமயத்தில் நம்தாய் நரைத்த தலைமுடியோடு குழிவிழுந்த கண்களோடு கூனிப்போன முதுகோடு காட்சியளித்தால் அவளைத் தாயென்று சொல்ல நாம் தயங்குவதா கருவளலைப் பாம்புகளைப்போல சுருண்டு தொங் கும் என்னுடைய மயிர்ச் சுருள்களைப்பார் மாபிள்கல்லைப் போன்ற என் கன்னத்தின் அழகின் எழிலைப்பார் கறுத்த வண்டைப் போல் துரு துருவென்று துடிக்கும் என் பேசும் விழிகளைப்பார். மூன்றாம்பிறைச் சந்திரனைப் போல அமைந்த நெற்றியைப்பார். முத்துப்பற்களை மூடிவைத்திருக்கும் செக்கச்சிவந்த அதரங்களைப்பார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக குயிலின் குரலையும் குழலின் இனிமையையும் மெல்யாழின் நரம்புதனைத் தடவும்போது எழும் மதுர நாதத்தையும் விட இனிய என் வார்த்தைகளைக் கேள் அவற்றின் நல்லாவின் பால்ச் சுவையும் கொம்புத்தேனின் ருசியும் பொதிந்து கிடப்பதை உணர்.

என் வார்த்தைகளைக் கேள் இவ்வளவு சிறப்போடு கூடிய எனது அன்னையா அதோ இலவம் பஞ்சைப்பொன்ற தலையோடும் எலும்புதோன்றிய முகத்தோடும் பொக்கைவாயோடும் க்கு... க்கு...என்று இருமிக்கொண்டு இருப்பவள் என்று நாம் நமது தாயைச் சொல்ல முனைவோமா அழகு சுந்தரியான உன்னைப் பெற்று பெரியவளாக்கிய உன் அன்னை உன் இன்றைய வயதில் அன்று கொள்ளையழகோடு காட்சியளித்திருப்பாள் என்பதில் என்ன சந்தேகம். உன் அழகைப்பருக உன் அன்புப் பார்வையை அனுபவிக்க உனது அகம் கொடுக்க கரந்தீட்டும் காதற்கடிதங்களைப் பெற இன்று உன்னைத் தொடரும் இளைஞர் கூட்டத்தைப்போல் அன்று உன் அன்னையை பார்த்து எத்தனை பேர் ஆசை வைத்திருப்பார்கள் என்று எண்ணிப்பார்.

அதை ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால் சொந்தத் தாய் சோற்றுக்கு வழியின்றி திண்றாடுகையில் பெற்று வளர்த்த மாதா பிச்சையெடுக்கையில் "ஐயா தருமம் போடுங்கள் சாமி" என்று தெருத் தெருவாக அலையும் போது இன்னுமொருவன் தாய்க்குப் பாலும் சோறும் படைத்து பவள அட்டிகையும்(நெஉடநள) பரிசளிப்பவனைப் போல் நாம் இருக்கலாமா? என்று உங்களைக் கேட்பதற்குத்தான் தாய் இளமையில் எப்படி காட்சியளித்திருப்பாளோ அப்படி எம் முந்தையர் காலத்தில் இந்நாடு எவ்வண்ணம் விளங்கியதென்பதைத் தெரிந்து கொள்ளவே தான் நாம் பிறந்த நாட்டைப் பற்றியும் அதன் சரித்திர சம்பவங்களைப் பற்றியும் அந்நாடு விளங்கிய தனிப்பெரும் சிறப்பைப்பற்றியும் பார்த்து ஓரளவு சிந்திக்க வேண்டும்.

நாம் பிறந்த நாட்டை இன்று இலங்கையென அழைக்கிறோம். இந்நாட்டின் சரித்திரத்தை கி.மு.505ல் இருந்தே சகல சரித்திர ஆசிரியர்களும் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட காலத்திலேயே மேற்படி ஏடுகள் ஆரம்பிக்கப்பட்டது மட்டுமின்றி விஜயன் என்னும் கலிங்க மன்னன் இலங்கைக்கு வந்தபின்பே கமத்தொழிலும் கைத்தொழிலும் கல்விச் சாலைகளும் தோன்றின என்றும் அவை குறிப்பிடுகின்றன. விஜயன் இங்கு வரும்போது இந்நாட்டை காலசேனன் என்பவன் ஆட்சி புரிந்ததாகவும் விஜயனும் அவனது தோழர்களும் காலசேனனைக் கொலை செய்து இராச்சியத்தை அபகரித்ததாகவும் அவை தெரிவிக்கின்றன.

புத்தளத்துக்கு அருகில் இறங்கிய விஜயன் அவ்விடம் செம்மண் செறிந்ததாய் இருப்பதைக் கண்டு அதற்கு தம்பண்ணை என்று பெயரிட்டதாகவும் காலவரையில் அப் பெயர் 'தாமிரபரணி'யாக மாறிற்றென்றும் மேலும் அவை தெரிவிக்கின்றன.

(தொடரும்)

தொடர்ச்சி...

## டெங்கினால் ...

கேட்கப்பட்டுள்ளனர். இதற்கிடையே, நுளம்பு ஒழிப்பு உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமென அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். 2017 ஆம் ஆண்டு முதல் 1500 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறினார். டெங்கு நோயை ஒழிக்கும் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்குடன் இவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி...

## வடக்கு, கிழக்....

மட்டக்களப்பில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலருடன் தொடர்பு கொண்ட முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி வெளியிடவுள்ள தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாகப் பேசியதாகவும் விரைவில் மட்டக்களப்பில் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்துக்கு ஏற்கனவே சென்ற எஸ்.பி.திஸாநாயக்காவின் சகோதரர், ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் யாழ் வந்து சந்திக்க விருப்பம் தெரித்துள்ளதாகக் கூறியுள்ளார். அரசியல் சந்திப்பாக இல்லாமல் உயர்கல்விச் செயற்பாடுகள் தொடர்பாகவே பேசவுள்ளதாகவும் அவர் கூறியதாக மூத்த விரிவுரையாளர் ஒருவர் கூறினார். ஆனால் இவ்வாறான சந்திப்புகளை பல்கலைக்கழகத்தில் நடத்த முடியாதென பல்கலைக்கழக நிர்வாகம் கூறியதாகவும் அந்த மூத்த விரிவுரையாளர் கூறினார்.

யாழ் ஆயர் இல்லத்துடனும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா தொடர்பு கொண்டு பேசியதாகவும் யாழ்ப்பாணத் தகவல்கள் கூறுகின்றன.

தொடர்ச்சி...

## உள்மனயாத்திரை தந்த உமாவரதராஜனின் மற்றுமொரு படைப்பு 'மோகத்திரை'

திருமதி.சிவப்பிரியா சிறிராம் அவர்களும் திரைப்பட இயக்குநர் ஏ.ஹசீன் அவர்களும் நிகழ்த்த, பதிலுரையை நூலாசிரியர் உமா வரதராஜனும், நன்றியுரையை சி.புனிதனும் நிகழ்த்துவர்.

இதனை விட திருமதி.பிரியதர்சினி ஜெகதீஸ்வரன், ஜீட் நிரோஷன், குணநாதன், சுகிர்தராஜன், சபேஷன் ஆகியோர் இணைந்து செவிக்கு விருந்தாக பாடல்களை வழங்குவர்.

தொடர்ச்சி...

## கட்டற்ற....

அதிபரை அழைத்தனர். அவர் வரவில்லை. ஒரு கூட்டம் முகநூல் வாயிலாக அவர்மீது தனிப்பட்ட சேறு பூசல்களை மேற்கொண்டது. மட்டு மேயர் தனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றும் தனக்கு தெரியாமலே இது நடந்து விட்டது என்றும் ஓர் அறிக்கையை விட்டுவிட்டார். அப்படிப்பட்ட அவர் கூட போராட்ட இடத்திற்கு வரவில்லை.

அரச அதிபர் தனது பக்க நியாயத்தை புதன்கிழமை ஊடக சந்திப்பொன்றை நடத்தி தெரிவித்தார்.

ஆனாலும் செவ்வாய்க்கிழமை கல்லடிப்பால நிகழ்வு இனிமேல் சரிபிழைகளுக்கு அப்பால் மட்டக்களப்பில் எந்தவொரு போராட்டத்தையும் நடத்தக்கூடாது, நடத்த விடமாட்டோம், பொலிஸ் இராணுவ அடக்கு முறை தொடரும் என்ற எச்சரிக்கையின் முதற்படி. பொலிசாரின் தாக்குதல் மிகமோசமாக அமைந்து விட்டது. பெண் மாநகர உறுப்பினர்கள் இருவர் ஆண் பொலிசாரால் மிக மோசமாக தாக்கப்பட்டார்கள். ஒருவர் தனது உறுப்பினர் அடையாள அட்டையை காட்டக்காட்ட அடித்த வண்ணமே இருந்தனர். மற்றையவர் மிகப் பிரபல்யமானவர். சிலரை அடையாளப்படுத்திக் கொண்டே தாக்குதலை மேற்கொண்டனர். பெண் உறுப்பினர்கள் உட்பட அறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலர் அடிவாங்கிக் கொண்டு வைத்தியசாலைக்குச் செல்லவில்லை. பல இளைஞர்கள் குறி வைக்கப்பட்டு விட்டனர். எதிர்காலத்தில் வேறு வகையில் அவர்கள் மீது பொலிசாரின் நடவடிக்கை பாயலாம்.

பௌத்த மதகுமார் யாராவது அவ்விடத்தில் கலந்து கொண்டிருந்தால் பொலிசார் தாக்குதல் நடத்தியிருக்க மாட்டார்கள் என்ற கருத்து பரவலாக பேசப்பட்டது. உண்மையும் அதுவே. சென்றவாரம் வெளியிடங்களிலிருந்து மட்டக்களப்பிற்கு வந்து பௌத்த குருமார்கள் மட்டக்களப்பு கம்பஸீக்கு எதிராக ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தார்கள். அப்போது பொலீசார் கைகட்டி பார்த்திருந்தார்கள். அப்படியானால் மட்டக்களப்பில் மட்டக்களப்பு தமிழர்களால் ஒரு போராட்டத்தை நடத்த முடியாதா? வாக்குகளைப் பெற்றவர்கள் என்ன செய்கிறார்கள்? போக்குவரத்துக்கு குந்தகம் என்றால் கைது செய்திருக்க வேண்டும். வன்முறையை ஏவ எங்கிருந்து அனுமதி வழங்கப்பட்டது? கண்ணீர் புகைப்பிரயோகமும் குண்டாந்தடிப் பிரயோகமும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட பல உள்ளூராட்சி உறுப்பினர்கள் மீதும் இளைஞர்கள் மீதும் நிகழ்த்தப்பட்டது.

முந்தைய ஆட்சிக்கும் நல்லாட்சிக்கும் இருந்த வேறுபாடு இதுதான், இனி அதுவும் இல்லையென பொலிஸ் அடக்கு முறை நிரூபித்து விட்டது.

தொடர்ந்தும் மட்டக்களப்பு பிரச்சனைகளால் சூழத்தான் போகிறது. போராடத்தான் வழியில்லை. நாங்களும் பௌத்தர்களாக மாறுவதைத் தவிர வேறு வழியில்லையோ தெரியாது.

# அக்கினி புலையவெளி
## உணவு உற்பத்திப் பொருட்கள்
### சைவ முறையில் தயாரிக்கப்பட்டது

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர் ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இல:- 0771516203**

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு

## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

1 கிலோ 400ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 400ரூபாய்



எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa